பக்கங்கள்-16 19,சித்திரை2020






# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06






மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -294





## சீன பொருளாதாரம் இலங்கைக்கு ஆபத்து!
## இவர்களை வெளியேற்றுவதே சிறந்த வழி





## பத்து ஆண்டுகளை கடந்து செல்லும் முள்ளிவாய்க்காலின் சோக வரலாறு



## இலங்கையில் பொருளாதார வீழ்ச்சியை கட்டியெழுப்புவதே இன்றைய சூழ் நிலையின் அவசியம்

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# சீன பொருளாதாரம் இலங்கைக்கு ஆபத்து! இவர்களை வெளியேற்றுவதே சிறந்த வழி



கொரோனா வைரஸ் (covid -19) என்கின்ற ஒரு பரப்பு என்பது சீனாவில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது ஒன்று. அது கிட்டத்தட்ட 107 நாடுகளிற்கு மேல் தாக்கத்தை உருவாக்கியுள்ளது. குறிப்பாக குறித்த நாட்டில் பாதிப்புக்கள் அதிகளவு குறைந்திருக்கின்றது. ஆனால் ஏனைய நாடுகளில் கிட்டத்தட்ட இருபதாயிரத்தையும், பத்தொன்பதாயிரத்தையும், பதினெட்டாயிரத்தையும் தாண்டிவிட்டது. அந்த அடிப்படையில் இலங்கையிலும் கூட கொரோனா தொற்று என்பது இதுவரையில் 7பேர் மரணமடைந்திருக்கின்றார்கள். அது மட்டுமின்றி 103பேர் தொற்று சந்தேகத்தில இருக்கின்றார்கள். அதுபோன்று 260பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது. இது வரையில் 86பேர் குணமடைந்திருக்கின்றனர் என்பது குறிப்பிடதக்கது.

உலகளாவிய ரீதியில் எடுத்துக்கொண்டால் இலங்கையினுடைய கொரோனா தொற்றினுடைய வேகம் குறைந்து காணப்படுகின்றது. இருப்பினும் இந்தியாவிலே ஆயிரத்தையும் தாண்டி விட்டது. உலகளாவிய ரீதியில் எடுத்துக்கொண்டால் தொற்றுக்குள்ளானவர்கள் 2,330,987 குணமடைந்தவர்கள் 596,687 மரணமடைந்தவர்கள் 160,757 என்பது உண்மையிலயே கவலைக்குரிய விடயம்.

கொரோனா தொற்றானது சீனா நாட்டில் இருந்தே ஏனைய நாடுகளுக்கு பரவியுள்ளது. எனவே இந்த விடயத்தில் உலக நாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். சீனாவின் கம்பனிகள் ஒவ்வொரு நாடுகளிலும் இருக்கின்றன. கிட்டத்தட்ட 175 நாடுகளில் சீனாவின் வர்த்தகம் தலை தூக்கியுள்ளது. அந்த அடிப்படையில் பார்க்கின்ற பொழுது சீனாவினுடைய வர்த்தகத்தை அடியோடு ஒழிக்க வேண்டும். ஏனென்றால் அவர்கள் ஒரு சிறு துணிக்கையின் ஊடாக வைரஸ் பரம்பலை ஏற்படுத்தி இருக்கின்றார்கள். ஒரு நாடு இருக்கின்ற போது அந்த நாட்டிலே தொற்று பரவுவதாக இருந்தால் முதலிலே அந்த நாடு முழுவதுமே பாதிப்படைய வேண்டிய தேவை இருக்கின்றது அல்லது முழுவதுமே அழிய வேண்டிய தேவை இருக்கின்றது. அதன் பிறகு தான் ஏனைய நாடுகளுக்கு அந்த தொற்று பரவ கூடியதான வாய்ப்பு இருக்கின்றது.

சீன நாட்டின் ஊடாக தான் தொற்று பரவியிருக்கின்றது. உலக சுகாதார சபை இனி என்ன முடிவு எடுக்கப்போகின்றது. சீனாவின் முதலீடுகளை கொண்ட நாடுகள் என்ன முடிவு எடுக்கப்போகின்றார்கள்? என்பதை அவதானித்து அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். அதுபோன்று ஏனைய நாடுகளும் அதற்கான முடிவுகளை எடுக்கும். இலங்கையை பொறுத்த வரையிலே நாம் சொல்ல வேண்டியது இது தொடர்பான விளக்கங்களை இராணுவ தலைமையகங்களுக்கும், புலனாய்வினருக்கும் அல்லது இந்த நாட்டின் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் சொல்ல வேண்டி இருக்கின்றது. ஊடகம் என்பது ஒரு புலனாய்வு சார்ந்த நடவடிக்கையாக தான் ஊடகங்கள் இருக்கின்றன. அந்த அடிப்படையில் பார்க்கின்ற பொழுது கரையோர பாதுகாப்பை அரசாங்கம் பலப்படுத்த வேண்டும். அடுத்து சீன காலணித்துவம் இந்த நாட்டில் உருவாவதை தடுத்து சீனாவை இந்த நாட்டில் இருந்து வெளியேற்ற வேண்டும். அவ்வாறு வெளியேற்ற தவறினால் இந்த நாடு உண்மையில் ஒரு அமெரிக்காவினுடைய அல்லது ஏனைய நாடுகளினுடைய கண்காணிப்பிலே ஒரு பாரதூரமான விளைவினை சந்திக்க வேண்டிய சூழல் இந்த நாட்டிற்கு ஏற்படும்.

சீனாவை நம்பியிருந்தால் மட்டும் போதாது அவர்கள் இந்த இலங்கையை கூட ஒரு விரல் அசைவிலே அதை அழித்து விடுவார்கள். ஒரு வைரஸைபரப்பிவிட்டால்கூடபோதுமானதாக இருக்கும் ஆகவே சீன நாட்டை இலங்கையில் வெளியேற்ற வேண்டும் முதலாவது. இரண்டாவது விடயம் என்ன வென்றால் கடலோரபாதுகாப்புசரியாகவிடுதலைப்புலிகள் இருந்த காலக்கட்டத்தில் கடலோர பாதுகாப்பு என்பது மிக உறுதியாக இருந்தது எந்தவொரு நாட்டுக்கப்பலும் இந்த கடற்பகுதிக்கு வந்து போவது என்பது மிக கடினமானதாகவே இருந்த ஒரு விடயம். ஆகவே அமெரிக்கா அக்காலத்தில் முடிவெடுத்துக்கொண்டது என்னவென்றால் எந்த விடுதலைப்புலிகளை கடல்,வான்,தரை என்று இருக்ககூடிய விடுதலைப்புலிகளை அழிக்க வேண்டுமென்பதே அமெரிக்காவும் சேர்ந்து 57நாடுகள் முயற்சி எடுத்ததன் விளைவாக இன்று தமிழீழ விடுதலைப்புலிகளுடைய போர் மௌனிக்கப்பட்டுள்ளது.

ஆகவே இதிலே இந்த விடுதலைப்புலிகள் கடல்புலிகளில் இருந்தவர்கள் அதிலே சிறந்து விளங்கியவர்கள் இந்த கொடிய கொரோனா வைரஸை ஒழிப்பதற்கு பயன்படுத்த முடியும் ஏனென்றால் அவர்கள் எவ்வாறு அந்நிய நாட்டு படகுகளோ அந்நிய நாடுகளோ எங்கள் நாட்டுக்குள் கடல் மார்க்கமாக ஒரு நாட்டை கைப்பற்ற வேண்டுமாக இருந்தால் கடல்மார்க்கமாக தரையிறக்கம் செய்யப்பட்டு அந்த நாட்டை கைது செய்து விடலாம். ஆகவே இந்த கடல்பிராந்தியத்திலே தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் அதற்கு மிக உறுதுணையாக செயற்பட்டு இருந்தார்கள். ஆகவே இவ்வாறான உதவி ஏற்படுகின்ற பட்சத்தில் அவர்களை எடுத்து பயன்படுத்தக்கூடியதான ஒரு நிலைமை இருக்கின்றது. மூன்றாவது விடயத்தை பார்க்கின்ற போது சீனாவினுடைய உற்பத்தி சந்தையில் இருந்து அகற்ற வேண்டும்.

ஏனென்றால் அதிலே ஒரு நீண்ட காலத்தின் பின்னர் மக்களை அணு அணுவாக கொள்ளுகின்ற கொடிய விசங்கள் அந்த பொருட்களிலே உற்பத்தி செய்யப்படுகின்றது. ஒவ்வொரு நாட்டிற்கு ஒவ்வொரு விதமான முறை யிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றது. இங்கே அதற்குள் ஒரு கெமிக்கலை அனுப்புகின்ற வேலையில் உண்மையிலே அப்படி எத்தனையோ பொருட்கள் உள்ளது திண்ம,திரவ இருக்கின்றது. இவற்றையெல்லாம் நாம் இந்த நாட்டிலே இருந்து இரண்டாவது வியாபார ரீதியாக அப்புறப்படுத்த வேண்டும்.மூன்றாவது சீன புலனாய்வு ,சீன கம்பனிகள் இருக்கின்றன இவற்றை நாம் அப்புறப்படுத்துவதன் ஊடாக அங்கிருந்து நம் நாட்டினுடைய புலனாய்வு தகவல்கள் அவ்வாறே வெளியேறுகின்றது. இவற்றையெல்லாம் கட்டுப்படுத்துவதன் ஊடாக இந்த புலனாய்வு நடவடிக்கையில் இருந்து நாம் தப்பித்துக்கொள்ளலாம் .

இது பாரியதொரு அழிவை சந்திக்க வேண்டிய தேவை இருக்கின்றது. சீனா இலங்கை மீது ஒரு நட்புறவை கொண்டிருக்கின்ற போது ஏனைய நாடுகள் இலங்கையின் மீது பாரிய தொருசக்தியாக உருவெடுத்து அந்தநாடுகளை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் தான் ஈடுபடுவார்கள் காரணம் என்னவென்றால் சீனா, ஜப்பான், அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா போன்ற நாடுகள் சீனாவை தற்போது எதிர்க்க தொடங்கிவிட்டது. சீனாவினுடைய எந்தவொரு வியாபார பொருட்களும் அந்த நாட்டிற்குள் நுழைய அவர்கள் தடைவிதித்திருக்கின்றார்கள். ஆகவே தற்பொழுது கிடைத்திருக்கின்ற செய்திகளில் கூட சீனாவை சேர்ந்த ஒருவர் அமெரிக்காவில் படித்த விஞ்ஞானி ஒருவர் அந்த பரப்புக்கு துணைபோயிருக்கின்றார் என்பது கண்டறியப்பட்டிருக்கின்றது. வௌவாலில் இருந்து தான் அந்த வைரஸ் பரவியது என்று தரவுகள் தெரிவிக்கின்ற வேலையிலேயே சீனாவில் மீண்டும் 1500க்கும் மேற்ப்பட்டோர் இறந்திருக்கின்றார்கள். ஒவ்வொரு நாளும் அமெரிக்காவிலேயே 1000 பேர், ஸ்பெயின், இத்தாலி போன்ற நாடுகளிலேயே 1000 கணக்கானோர் நாளாந்தம் இறந்து வருகின்றார்கள். ஆகவே இதற்கான மருந்து கண்டுபிடிக்கப்பட்டு விட்டது. இதற்கான மருந்து தயாராக இருக்கின்றது என்று எல்லாம் ஒவ்வொரு நாடும் சொல்லுகின்றது பல மூலிகைகள் இருக்கின்றது அந்த மூலிகைகள் மூலம் குணப்படுத்த முடியும் என்று கூறுகின்றது. இறைவன் ஊடாக நிறுத்த முடியும் என்று இன்னொரு பக்கம் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள்.

இவையெல்லாம் ஒரு புறமிருக்க நிச்சயமாக நாம் இந்த இலங்கை தீவை பாதுகாத்துக்கொள்ள வேண்டிய தேவை நாட்டில் இருக்க கூடிய குடி-மகன் என்ற நிலையில் எம் ஒவ்வொருவருக்கும் உள்ளது. அதனை நாம் சரியாக கடைப்பிடிக்கின்ற பொழுது தான் நாட்டை பாதுகாக்க முடியும் சீனாவ-னுடைய வல்லாதிக்கம் உண்மையிலேயே அமெரிக்காவினுடைய வல்லாதிக்கத்தினால் தான் சீனா இவ்வாறு பலம் பொருந்திய நாட-ாக உருவாகுவதற்கு காரணமாக அமைந்தது. ஒரு சர்வதிகார நாடுகள் ஒவ்வொன்றும் ஏனைய நாடுகள் முன்னேற்றம் அடைய விட்டதாக இல்லை ஒரு சர்வதிகாரி என்பதை அடிக்கொரு முறை காட்டிக்கொண்டிருக்கின்ற அமெரிக்காவுக்கு சீனாவினுடைய உத்வேக வளர்ச்சி ஒரு பாரிய நெருக்கடி நிலைமையை தோற்று வித்திருக்கலாம். இன்றைய பொழுதை பார்க்கின்ற போது மக்களுடைய உயிரினுடைய பாதுகாப்பு மிக அத்தியாவசியப்படுகின்றது.

107 நாடுகளுக்கு மேல் தொற்று ஏற்பட்டிருக்கின்றது என்பது சாதாரணவிடயமல்ல இலங்கையில் கூட பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கின்றது அது மட்டுமின்றி ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. ஊரடங்கு உத்தரவு யுத்தக்காலத்தில் கூட அவ்வாறு பிறப்பிக்கப்படவில்லை இது ஒரு தொற்று நோய் ஆகவே மாவட்டத்தை விட்டு மாவட்டத்திற்கு மக்கள் செல்கின்ற போது அதிலே இருந்து தொற்று வருவதற்கான வாய்ப்பு நூற்றுக்கு நூறு வீதம் உள்ளது.

இவையெல்லாவற்றையும் தாண்டி இலங்கையிலேயே ஒரு தேர்தல் இடம்பெறவிருக்கின்றது. அந்ததேர்தல்கடைசி வரை பலர் கொரோனா தொற்றினூடாக தமது அரசியலை வளர்த்துக்கொண்டுள்ளார்கள். அதே நேரத்தில் கோட்டபாய ராஜபக்ஷ அவர்கள் மீது ஒரு கரிசனை உள்ள சம்பவங்களும் தற்பொழுது நடந்து வருகின்றது. தண்ணீர் கட்டணம், மின்சாரக்கட்டணம், நுன்றிதிக்கடன்கள் அவையெல்லாவற்றையும் குறைத்து உள்ளார். இன்னும் கொடுப்பனவு பலவும் கொடுக்க முன்வந்துள்ளார். வங்கிகளில் கடன் எடுப்பதற்கான வழிகளை ஏற்படுத்தியிருக்கின்றார். இன்னொரு சூழ்நிலை வந்து ஒரு தேர்தலையும் வைத்து விட்டால் தான் வெற்றி பெறுவேன் என்கின்ற ஒரு கொரோனா அலையினூடாக தான் வெற்றி பெறுவேன் என்று கங்கனம் கட்டி களம் இறங்கியிருக்கின்றார். தேர்தலை வெ-குவிரைவாக நடத்திவிடுவார்கள்.

ஏனென்றால் கொரோனா தொற்று வெகு விரைவாக ஆரம்பிக்கப்பட்டுவிட்டது என்ற நிலை உருவாக்கப்பட்ட நிலையிலும் கூட தொடர்ந்தும் கோட்டபாய ராஜபக்ஷ அவர்கள் வேட்புமனு தாக்குதலை செய்துவிட்டு தான் அவர் தனது வீட்டில் சென்று அமர்ந்திருந்தார் என்று பார்க்கின்றோம். அந்த அடிப்படையில் தேர்தலை அரசியல்வாதிகள் உட்பட பலரும் வெளியிலே கூறினாலும் அவர்களும் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் அவர்களின் நிலைகளும் பாராளுமன்றத்தைவிட்டு வெளியேறுவதனூடாக அவர்களும் ஒரு இக்கட்டான சூழ்நிலையில் வியாபார ரீதியாகவும் பல்வேறுதரப்பட்ட ரீதியாகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களும் ஒரு முதலீட்டை போட்டு பாராளுமன்ற தேர்தலிலே வெற்றி பெறுவதற்கான நடைமுறைகளை தாமாகவே செய்து கொண்டிருப்பார்கள்.

பாராளுமன்றதேர்தலைபொறுத்தவரையிலே மிகமுக்கியமானதொன்று தற்பொழுது நான் நினைக்கின்றேன் தென்கொரியாவிலே பாராளுமன்ற தேர்தல் வெற்றிகரமாக நடைபெற்றிருக்கிறது. அதுபோன்று இலங்கையிலும் பாராளுமன்ற தேர்தலை வைப்பதனூடாக பலர் நன்மையடைய இருக்கிறார்கள். அதே இடத்தில் மாவட்டங்களை விட்டு மாவட்டங்களுக்கு செல்லாது குறித்த மாவட்டங்களிலே இருந்து தேர்தலை நடத்துவதற்கான வழி முறைகளைத்தான் தற்பொழுது மேற்கொள்ள முடியும். அவ்வாறு மேற்கொண்டாலும் பிரச்சாரங்களுக்காக கொடுக்கப்படும் ஒருமாத காலம் போதுமானதாக இருக்குமா என்பது தெரியவில்லை. காரணம் என்னவென்றால் மக்கள் பொருளாதார ரீதியிலே பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலையிலே அரசாங்கம் கூடுதலான ஒரு பணத்தை இக்காலகட்டத்திலே மக்களுக்கு செலவளிக்க வேண்டியதேவையிருக்கிறது. போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க வேண்டிய தேவையிருக்கிறது, குறிப்பாக ஒவ்வொரு பாராளுமன்றத்திற்கு தெரிவாகிய எந்த கட்சி சார்ந்த வேட்பாளர்களிடமிருந்தும் மக்கள் தங்களுக்கான உதவிகளைத் தான் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். ஆகவே அந்த உதவிகள் செய்யப்பட வேண்டிய முக்கிய தேவையிருக்கிறது. இந்த உதவிகள் எவ்வாறு செய்யப்படும். செய்யப்படா விட்டால் மக்கள் வாக்குகளை போடுவதற்கு மிகவும் சிரமப்படுவார்கள். வாக்குகள் போடமாட்டார்கள் அல்லது கூடுதலாக 50 வீதமானோர் தான் இலங்கையிலே வாக்களிக்க கூடிய சூழ்நிலைகள் உருவாக்கப்படுவதற்கான வழிமுறைகள் இருக்கின்றது. ஆகவே இவற்றையெல்லாம் நாம் உற்று நோக்கும் பொழுது தேர்தலை கொரோனா வைரஸை கட்டுப்படுத்தியதன் பின்னர் தேர்தலை வைக்கலாம் என்று பல புத்திஜீவிகள், அறிவாளிகள் மற்றும் சுகாதார அமைப்பும் கூறுகின்றார்கள். தேர்தலை வைக்க வேண்டிய தேவை கோட்டபாய ராஜபக்ஷ விற்கு அத்தியவசியமாக அமைகிறது. காரணம் என்னவென்றால் இவ்வாறு சென்றுகொண்டிருக்கும் பொழுது இந்த நாட்டில் ஒரு இராணுவ ஆட்சி ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

தொடரும்...

இரணியன்

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## ஊரடங்கு சட்டத்தை தளர்த்தினாலும் கொரோனா வைரஸிற்கு எச்சரிக்கையாக இருப்பதே சிறந்தது

உலகளாவிய ரீதியில் கொரோனா வைரஸ் தொற்றினுடைய தாக்கம் பாரியளவில் ஏற்பட்ட போதிலும் அதனை கட்டுப்படுத்த முடியாது சர்வதேச சமூகமே திகைத்துப்போயுள்ளது. இந்த நிலையில் இலங்கையில் இருக்கின்ற அனைத்து மக்கள் பிரஜைகளும் கவனத்திற்கொள்ள வேண்டியது என்னவென்றால் உண்மையில் நாட்டில் மட்டும் கொரோனா வைரஸினுடைய தாக்கம் சிறிதளவு மட்டுமே பாதிப்புக்குள்ளாகியுள்ளது. ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இதுவரையில் 7 மரணங்கலே நிகழ்ந்துள்ளது. தொற்றுக்களும் 1000 கணக்கை தாண்டவில்லை. இதன் காரணம் என்னவென்றால் நாட்டின் ஜனாதிபதி ஒரு இராணுவ தளபதியாக இருந்தமையினாலும் அவ்வாறு இராணுவத்தை கொண்டு ஊரடங்கு சட்டத்தை நிலைநிறுத்தி கட்டுப்பாட்டிற்கு கொண்டு வரும் உத்தியை கையாண்டார் . இந்த வகையில் ஜனாதிபதி சரிபிழைக்கு அப்பால் பாராட்டப்படத்தக்கவர்.

இருப்பினும் அவசரப்பட்டு தேர்தலை வைக்கும் முறைமையானது மீண்டும் ஒரு சிக்கலை உருவாக்கலாம். காரணம் என்னவென்றால் உலக சுகாதார சபையும், இலங்கையின் சுகாதார சபையும் பல்வேறு சிக்கல்களையும் எதிர்நோக்கியுள்ளது. இலங்கையின் சுகாதாரத்துறை எவ்வாறு இடம்பெறுகின்றது என்பது பற்றி உலக சுகாதாரசபைக்கும் முறைப்பாடுகள் கொடுக்க வேண்டியுள்ளது. தற்பொழுது எமது நாட்டில் ஒரு தேர்தலை எதிர்நோக்க வேண்டியிருப்பதால் தேர்தலுக்காக இந்த நாட்டில் கொரேனா வைரஸ் ஒழிக்கப்பட்டுவிட்டது என்று கூறுவது பொறுத்தமற்றது ஒன்று. ஆகவே குறித்த மாவட்டங்களில் கொரோனா தொற்றின் தாக்கம் இன்னும் இருக்கிறது. அரசியல் இலாபம் கருதி தேர்தலை ஒத்திப்போடுகின்ற நடவடிக்கைகள் எல்லாம் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது ஒன்று. ஆகவே மக்கள் தாங்கள் இருக்கின்ற இடங்களில் தங்களை சுயபாதுகாப்பு செய்து கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். அவ்வாறு சுயபாதுகாப்பு செய்யப்படாவிட்டால் கொரோனா வைரஸ் தொற்றுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கிறது. மாவட்டத்தைவிட்டு மாவட்டம் செல்லும் பொழுதும் கொரோனா வைரஸ் தாக்குவதற்கான அதிக வாய்ப்புக்கள் இருக்கிறது.

போரைக் காரணம் காட்டி மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கிப்போன ஒரு காலகட்டம் மாறி தற்பொழுது உலகை அச்சுறுத்துகின்ற கொரோனா தொற்றினால் ஊரே அடங்குகின்ற நிலைமைக்கு தள்ளப்பட்டிருக்கிறது. கொரோனா வைரஸை பொறுத்தவரையில் சீனா அதனை உற்பத்தி செய்து தமது நாட்டை வல்லரசாக மாற்றிக்கொள்ளும் நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. சீனா இதுவரையில் 1500 வைரஸ்களை பாதுகாக்கும் மையத்தையும் மறைத்து வைத்திருக்கிறது. தொடர்ந்தும் சீனாவுடன் கைகோர்ப்போமாக இருந்தால் அந்த அழிவு பயங்கரமான நிலையை உருவாக்கும். சீனாவை பொறுத்தவரையில் 2018 ஆம் ஆண்டே இந்த வைரஸ்களை கண்டறிந்திருப்பர். வைரஸ்களை கண்டுபிடித்த முக்கிய படங்களும் அக்காலகட்டத்தில் வெளியிடப்பட்டு பின்னர் இணையதளத்தில் இருந்து அழிக்கப்பட்டு விட்டது. ஆனாலும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் சீனா ஆய்வகத்திலிருந்து வைரஸ் கசிந்தது என்று குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட போதிலும் இன்னும் அதற்கான முடிவுகள் எட்டப்படாத நிலைமைகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் நாட்டின் ஜனாதிபதி அவர்கள் கொவிட்– 19 வைரஸை கட்டுப்படுத்த வேண்டும் என்றும் நாட்டின் பொருளாதாரத்தை கட்டுப்படுத்த வேண்டும் என்றும் முயற்சித்து வருகின்றார். முற்றாக ஊரடங்கு சட்டத்தை இல்லாது செய்தல் என்பது பாரிய சிக்கல்களை உருவாக்கும்.

இந்த நாட்டை இனி பொருளாதாரத்திலிருந்து மீட்க விவசாயத்தை தவிர வேறுவழியில்லாமல் போகும். விவசாயிகளை பாதுகாக்க வேண்டிய தேவையும் எமக்கு உள்ளது. ஆகவே கொரோனா வைரஸிலிருந்து நாம் எவ்வாறு மீள முடியும் என்ற நோக்குடனேயே எமது செயற்பாடுகள் அமைய வேண்டும்.

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

**101**

இது “போரின் எசமானர்கள்” (நிரந்தரப்படை)என அழைக்கப்படுபவர்களின் சகல கணிப்புக்களையும் முறியடிக்கின்றதுடன் அவர்களது ஊக்கத்தையும் சாந்தமடையச் செய்கின்றது.

எந்தச் சூழ்நிலையிலும் சமரில் காயமடைந்த தனது தோழனைக் கெரில்லா சமர்க்களத்தில் எதிரிப் படையின் தயவில் விட்டுவிடக்கூடாது. இது நூற்றில் தொண்ணூற்றொன்பத வீதச் சந்தர்ப்பங்களில் அவனது இறப்பிற்குச் சமனானதாகும். என்ன சிரமமாக இருந்தாலும் அவனைச் சமர்ப பிரதேசத்திலிருந்து வெளியே எடுத்து பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். இதற்காகச் சகல பலத்தையும் கொடுத்து சகல ஆபத்தையும் நெருங்கி முயற்சி செய்ய வேண்டும். கேரில்லாவிற்குக் கெரில்லா மிக நம்பிக்கையான தோழனாக இருக்க வேண்டும்.

இவற்றுடன் சேர்த்து அவன் விழிப்புணர்வுள்ளவனாகவும் இருக்க வேண்டும். ஆவன் பார்க்கின்ற கேட்கின்ற சகலவற்றையும் எவருடனும் பகிர்ந்துகொள்ளவில்லை என்பதை அவன் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். ஊரையாடலின் போது தேவையற்ற எதனையும் தனது சமர்த் தோழனுக்குக் கூறக்கூடாது. ஏன் இதனை நினைவில் கொள்ள வேண்டுமெனில் கெரில்லாக்களின் செயற்பாடுகள் திட்டங்கள் பற்றி உண்மையான தகவலை அறிவதற்காக எதிரி எப்பொழுதும் கெரில்லாப் படைப்பிரிவிற்குள் தனது முகவரை அனுப்ப முயற்சித்துக் கொண்டிருப்பான்.

நாங்கள் முன்னர் குறிப்பிட்ட ஒழுக்கப் பண்புகளுடன் சேர்த்து கெரில்லா சில முக்கிமான உடலியல் பண்புகளையும் கொண்டவனாக இருக்க வேண்டும். அவன் தாங்குசக்தி கொண்டவனாக இருக்க வேண்டும். ஏனெனில் உணவு நீர் ஆடை ஆகியவற்றின் பற்றாக்குறை மற்றும் திறந்த வானின் கீழ் வாழ வேண்டியிருத்தல் போன்ற காரணத்தால் மாத்திரமன்றி காயமேற்படும் சமயங்களில் அல்லது நோய் வாய்ப்படும் சமயங்களில் தனது திடமான உடலமைப்பால் தானே தனக்கு மருத்துவமும் செய்ய வேண்டியுள்ளது. ஏதிர்காலத்தில் காயமடைந்தாலும் தனது தாங்குசக்தியால் கெரில்லா திறந்த பிரதேசத்திற்கு முக்கிய தேவையின்றிச் செல்லமாட்டான். ஆப்படிச் செல்வானாயின் அவன் எதிரியின் கையில் அகப்பட்டுக் கொல்லப்படலாம்.

இறுதியாக கெரில்லாவீரன் திடமான சுகதேகியாக இருக்க வேண்டும். இது சகல துன்பங்களைச் சமாளிக்கவும் நோய்வாய்ப்படாமலிருக்கவும் உதவுகின்றது. சுற்றுச் சூழலுடன் மிக நெருக்கமாக ஒன்றித்து சமர் நடக்கின்ற அந்த மண்ணின் ஒரு அங்கமாக அவன் மாறிவிடுகின்றான்.

கெரில்லாவிற்குப் பொருத்தமான வயதெல்லை எதுவென்ற கேள்வி எழுகின்றது. இதற்கு விடையளிப்பது அவ்வளவு எளிதல்ல. இதன் பொது வயதெல்லையை அதிகரிக்கின்ற அல்லது குறைக்கின்ற சமூக மற்றும் தனித்துவச் சிறப்பியல்களைக் கருத்தில் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக நகரவாசியின் உடலமைப்போடு ஒப்பிடுகையில் விவசாயியின் உடலமைப்பு கூடிய தாங்குதிறனைக் கொண்டுள்ளது. ஊடற்பயிற்சிக்குப் பழக்கப்பட்ட தேகாரோக்கிய வாழ்வைக் கடைப்பிடிக்கின்ற நகரவாசி கெரில்லாச் சூழ்நிலைக்குச் சிறப்பாகப் பழக்கப்பட்டுவிடுவான். ஆனால் மேசையின் முன்னால் எழுத்துவேலையுடன் இருப்பவன் அவ்வாறல்ல. பொதுவாகச் சொல்வதானால் கெரில்லாவின் நாடோடித்தனமான வாழ்க்கை நிலையைக் கருத்திற் கொண்டு கெரில்லா வீரனின் உச்ச வயதெல்லையாக நாற்பது வயதே கணிக்கப்பட வேண்டும். ஆனால் நிச்சயமாக விவசாயிகளைப் பொறுத்தவரையில் இது அவசியமான வயதெல்லையல்ல. எங்கள் போராட்ட வீரர்களில் ஒருவனான மேஜர் கிரெசென்சியோ பெரெஸ் தனது ஐம்பத்தைந்தாவது வயதில் சியெரா-மயெஸ் திராவிற்கு வந்தான். புடைப்பிரிவின் சிறந்த ஆட்களில் ஒருவனாக அவன் விளங்கினான்.

பொருத்தமான கேள்வி ஒன்று உள்ளது. கெரில்லாப்படைப்பிரிவு உருவாக்கப்படும் போது, குறித்த சமூக தெரிவு அவசியமா என்பதே அதுவாகும். ஏற்கனவே குறிப்பிட்டபடி, சமர் நடவடிக்கைக்காக தெரிவு செய்யப்பட்ட பிரதேசத்தின் தன்மையைக் கெரில்லாப் படைப்பிரிவின் சமூக உறுப்பினர்களே தீர்மானிக்கின்றனர். அதாவது விவசாயிகளே படைப்பிரிவின் போராட்ட கருவாக மாறவேண்டும். சந்தேகமின்றி விவசாயி சிறந்த போர்வீரனாக திகழ்கின்றான். ஆனால், இதனை ஏனைய வர்க்கத்தைச் சேர்ந்த மக்கள் நியாய போராட்டத்தில் பங்கெடுக்க கூடாதெனத் தவறாக விளங்கிக் கொள்ளக்கூடாது. இது தவிர, இங்கே தனிப்பட்ட ஒழுங்கில் சேர்க்கப்டும் சாத்தியமும் உண்டு.

ஆனாலும், நாங்கள் கெரில்லாவின் ஆகக்குறைந்த வயதெல்லை பற்றி இன்னமும் எதுவும் சொல்லவில்லை. சமர் அனுபவங்களின் பிரகாரம், முக்கிய ந்தர்ப்பங்களை நீங்கலாக, பதினாறு வயதிற்குக் குறைந்த இளையோரைப் படைப்பிரிவில் சேர்த்துக்கொள்ளக்கூடாது. இந்த இளையவர்கள், இன்னமும் முழுக்க முழுக்கக் குழந்தைகளே. வீரனுக்குரிய கடமைகளை நிறைவேற்றுகின்ற , கெரில்லா வாழ்வின் சகல துன்பங்களையும் சுமைகளையும் தாங்குகின்ற அளவிற்கு அவர்கள் இன்னும் பூரணமாக வளர்ச்சியடையவில்லை.

தொடர்வான்...

**நெற்றிப்பொறியன்**



# உலக பொருளாதார வலையமைப்பிலிருந்து சீனாவை ஓரம்கட்டும் ஐரோப்பிய வல்லரசுகள்

உலகின் அதிக சனத்தொகை கொண்ட நாடாகவும் ஆசிய கண்டத்திலுள்ள சீனா விளங்குகின்றது. இதனை விட உலகின் மிகப்பெரிய இராணுவ அமைப்பைக்கொண்ட நாடுகளில் முதல் 10இல் 3ஆம் இடத்தில் உள்ளது. பொருளாதார நிலையில் அமெரிக்காவுக்கு அடுத்து இரண்டாவது இடத்தில் உள்ளது. மிக இறுக்கமாக இராணுவ இரகசியங்கள் வெளியே தெரியாதபடி வடகொரியாவுக்கு அடுத்தபடியாக உள்ளது. சீனா எவ்வகையான ஆயுதங்கள் எவ்வாறான அணு ஆயுதங்கள் வைத்திருக்கின்றது என்பது கணிப்பிட முடியாத நிலையில் உள்ளது.

உலகின் 19ஆம் நூற்றாண்டுகளில் அதிகளவு மக்கள் இங்கிலாந்தில் உற்பத்தியாகும் பொருட்களை விரும்பி வாங்குவார்கள். எமது இலங்கை நாட்டில் கூட 1950ஆம் ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட லொறிகள், கார்கள், மோட்டார் சைக்கிள், வானொலி, தொலைக்காட்சிகள் போன்றன மக்கள் பாவனையில் அதிகம் இருந்தது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஜப்பானின் அசுர வளர்ச்சி அதன் உற்பத்தி பொருட்கள் உலகளவில் வேகமாக விற்பனையாகியது. இன்றுவரை ஜப்பான் பொருட்கள் உத்தரவாதத் தன்மையுடனும் நீண்ட கால பாவனைக்கு உகந்ததாக உள்ளதை அது தக்க வைத்துள்ளது. இதனால் ஜப்பானின் பொருட்களின் விலைகள் மிகவும் அதிகம். இதனை பாமர மக்கள் வாங்கி உபயோகிக்க முடியாத நிலைமை உள்ளது இதனை சீனா மிக தந்திரமாக பயன்படுத்தி ஜப்பான், அமெரிக்காவில் உற்பத்தியாகும் பொருட்கள் போன்று உற்பத்தி செய்து உலக சந்தையில் சாதாரண மக்களும் வாங்கும் விலையில் விற்பனை செய்ய தொடங்கியது.

உதாரணமாக கைத்தொலைபேசிகள், வானொலிகள் என பல பொருட்களை சீனா உற்பத்தி செய்தது. குறைந்தது 30 ஆண்டுகளில் பொருளாதாரத்தில் அசுர வளர்ச்சி அடைந்து உலக பொருளாதாரத்தின் கணிப்பில் அமெரிக்காவுக்கு அடுத்த இரண்டாவது இடத்தில் அது உள்ளது. சீனா அமெரிக்காவை பின்தள்ளி பொருளாதார நிலையில் முதல் இடத்திற்கு வரவேண்டும் என அது மிக வேகமாக போராடி வருகின்றது. அதற்கு தடைகளாக சில நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவின் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அதிபராவதற்கு முன்னர் அவர் ஒரு பெரிய தொழிலதிபர். இவருடைய இலக்கு இராணுவ ரீதியைவிட பொருளாதாரத்தில் முன்னிலையில் உள்ளதை தக்க வைப்பதே இவருடைய நோக்கம். ஏனெனில் ட்ரம்ப் முன்னர் இருந்த அமெரிக்க அதிபர்கள் இராணுவ ரீதியான வளைகுடா ஆக்கிரமிப்புகள் ஆப்கானிஸ்தான் மோதல்கள் போன்றவற்றினால் பொருளாதார ரீதியில் அமெரிக்கா சரிவை நோக்கி நகரத் தொடங்கியது. அத்துடன் அங்கு வேலையில்லா பிரச்சனைகள் அதிகரித்தது. இந்நிலையில் இடம்பெற்ற அதிபருக்கான தேர்தலில் ட்ரம்ப்பிற்கு எதிராக கிலாரிகிளிண்டன் போட்டியிட்டார். கருத்துக் கணிப்பின்படி பார்த்தால் கிலாரி கிளிண்டன் தான் வெற்றி பெறும் நிலையில் இருந்தார். ஆனால் கடைசி நேரத்தில் அமெரிக்கா மக்கள் டொனால்ட் ட்ரம்ப்பை அதிபராக தெரிவு தெய்தனர். இதற்கு காரணம் ஒரு தொழிலதிபராக உள்ளதுடன் ஒரு கோடிஸ்வரராகவும் காணப்பட்டார்.

அத்துடன் சரிவு நிலையில் உள்ள பொருளாதாரத்தையும் வேலையில்லா பிரச்சனையையும் தூக்கி நிறுத்த கூடிய வல்லமை டொனால்ட் ட்ரம்ப்புக்கு இருப்பதை அமெரிக்க மக்கள் புரிந்து கொண்டு அவரை அதிபராக்கியதுடன் கிலாரி கிளிண்டனை தோற்கடித்தனர். ட்ரம்ப் மக்கள் ஆணையை ஓரளவேனும் நிறைவேற்றி வருகின்றார். பொருளாதார நிலையில் முதலிடத்தை தக்கவைத்துள்ளார். இன்னுமொரு விடயம் யாதெனில் அமெரிக்காவும் இந்தியாவும் அண்மையில் சந்தித்து பல கூட்டு உற்பத்தி நடவடிக்கைகளை கைச்சாத்திட்டது சீனாவின் கனவில் மண் அள்ளி போடுவதாக உள்ளது. சீனாவுக்கு மிக எதிரான நாடாக இந்தியா உள்ளது. அடுத்து அமெரிக்கா இவ்விரு நாடுகளும் இணைந்து செயற்பட தொடங்கியமை சீனாவின் வயிற்றில் புளியை கரைப்பது போல் தென்பட்டது.

அண்மைக்காலமாக இந்தியாவும் பொருளாதார ரீதியாக முன்னேற்றமடைந்து வருவது கண்கூடு ஆசிய ஐரோப்பிய வலயத்திற்குள்ளே சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியாவின் உற்பத்தி பொருட்களை கொள்வனவு செய்வதில் ஆசிய ஐரோப்பிய நாடுகள் போட்டிபோட்டுக்கொண்டிருப்பது சீனாவுக்கு சரியாகப்படவில்லை.



தனது பொருளாதார நிலையில் முதலிடம் என்ற கனவு கானல் நீராக போகுமோ என்ற நேரத்தில் 2019 டிசம்பர் சீனாவில் வுகான் மாகாணத்தில் ஒரு சலசப்பு தோன்றியது. அது மெதுமெதுவாக ஒரு வைரஸா க உருவெடுத்து விஸ்பரூபமாகியது. உயிரிழப்புக்கள் அதிகரிக்கத் தொடங்கியது. 1,10,100 ஆயிரம் என கடந்து சென்றது. சீனா அதனை கொ-ரோனா வைரஸ் என உலகிற்கு அறிவித்தது. உலக நாடுகள் அதனை பெரிதாக கணக்கில் எடுக்கவில்லை. சீனா தனித்து போராடி வுகான் மாகாணத்தை முற்றாக முடக்கி ஊரடங்கு உத்தரவை பிறப்பித்தது. அதற்கிடையில் பலியெடுப்புக்கள் மூவாயிரத்தை தாண்டிய நிலையில் ஏனைய நாடுகள் உசார் அடைந்தன. ஆனால் அதற்குள் கைமீறி உலக நாடுகளில் கொரோனா வைரஸ் பரவிச்சென்று கோரத்தாண்டவம் ஆடியது. சீனாவில் உருவாகிய கொரோனா வைரஸில் சுமார் மூவாயிரத்து ஐந்நூறு பேர் பலியா கினர். நோய்த்தொற்றால் 85 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டனர். சுமார் 2 மாத காலம் போராடி அதனை கட்டுப்படுத்தி வெற்றி கண்டது சீனா.

இங்கு ஒரு விடயத்தை கவனிக்க வேண்டும். கொரோனா சீனாவின் பொருளாதார மையங்களான சங்காய், பீஜிங் போன்ற முக்கிய நகரங்களை தாக்காமல் பார்த்துக்கொண்டது. ஆனால் ஏனைய நாடுகளைப் பார்த்தால் அந்த நாடுகளில் பொருளாதார மையங்கள் உள்ள நகரங்கள் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டது. அமெரிக்காவில் நியூயோர்க் நகரம் மிக மோசமாக பாதிக்கப்பட்டது.

அமெரிக்கா கொரோனா தொற்றால் உலகில் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளில் தற்பொழுது முன்னிலையில் உள்ளது. அத்துடன் உயிரிழப்புக்களிலும் அது முன்னிலையில் உள்ளது. அதற்கு அடுத்தபடியாக இத்தாலி, ஸ்பெயின், பிரான்ஸ், பிரித்தானியா போன்ற நாடுகள் உள்ளன. சீனா மிகவும் தந்திரமாக கொரோனா தொற்றை தனது பொருளாதார மையத்தை தாக்காத வண்ணம் பார்த்துக்கொண்டது. சீனாவில் 2019 ஆம் ஆண்டு டிசம்பரில் தோன்றிய கொரோனா சரியாக 2 மாதம் கடந்து கொரோனா தொற்றை முறியடித்து விட்டதாக கூறி ஊரடங்கை தகர்த்தியதுடன் வுகான் மாகாணத்துடனான போக்குவரத்து தடையை எடுத்துக்கொண்டது மட்டுமன்றி சகல உற்பத்தி நடவடிக்கைகளையும் அது ஆரம்பித்து விட்டது. கடந்த 2 மாத பொருளாதார சரிவை மிக வேகமாக நிவர்த்தி செய்ய தனது நாட்டு மக்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்று அந்நாட்டு பிரதமர் அறைக்கூவல் விடுத்துள்ளார்.

தற்பொழுது கொரோனாவில் அமெரிக்கா உட்பட ஐரோப்பிய, ஆபிரிக்க பாலைவன நாடுகள் என ஒட்டுமொத்த நாடுகளும் தினறிவிடும்நிலையில்கொரோனாஉருவான சீனா அதில் மீண்டுவிட்டதாக கூறி செயற்பட தொடங்கியமை உலக நாடுகளுக்கு ஒருவித சந்தேகத்தைஉருவாக்கியுள்ளமைதெளிவாக தெரிகின்றது. சீனா கொரோனாவால் ஏற்பட்ட வீழ்ச்சியை அதனை வைத்து எவ்வாறுநிமிர்வது என்பதைதனது சானக்கிய திட்டமிடலுடன் செயற்பட தொடங்கியுள்ளது. எவ்வாறெனில் என்பதை பார்ப்போமானால் தற்பொழுது உலக நாடுகளின் பொருளாதாரம் மிகவும் கேள்விக்குறியாக உள்ள நிலையில் உயிர்களை காப்பாற்றுவதா? அல்லது நோய்த்தொற்றிலிருந்து பாதுகாப்பதா? என உலக நாடுகள் தினறும் நிலையில் சீனா சத்தமின்றி தனது உற்பத்தி தொழிற்சாலைகளில் பொருட்களை உற்பத்தி செய்ய தொடங்கியுள்ளது.

கொரோனா தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கான முகமூடிகளை வென்டிலேட்டர்களை காலத்தின் தேவையறிந்து உடனடியாக உற்பத்தி செய்து அனைத்து நாடுகளுக்கும் அதனை விற்பனை செய்ய முனைந்துள்ளது. சகல பொருட்களின் உற்பத்தி விலையினையும் தற்பொழுது சீனா தான் முடிவு செய்யப்போகின்றது. அத்துடன் உலக நாடுகளில் ஈடாட்டத்திலுள்ள பல பாரிய உற்பத்தி தொழிற்சாலைகளை கையகப்படுத்தும் கைங்காரியத்தில் மிக இரகசியமாக ஈடுபடுவதாக தெரிய வருகிறது. அத்துடன் உலக நாடுகளின் சரிவில் உள்ள பங்கு சந்தை பங்குகளாக கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளில் அது ஈடுபட்டுள்ளது.

இன்று உலக பொருளாதாரத்திலும் சரி, இராணுவ வலிமையிலும் சரி, சுகாதார துறையிலும் சரி முதலிடத்திலுள்ள அமெரிக்காவில் நோய்த்தொற்றை கட்டுப்படுத்த முடியாமல் உயிரிழப்புக்கள் அதிகரித்து செல்ல சீனா எவ்வாறு இதை கட்டுப்படுத்தியது. உலக சுகாதார துறையில் வளர்ச்சியடைந்த இத்தாலி, ஸ்பெயின், பிரான்ஸ் போன்ற நாடுகள் திக்குமுக்காடும் நிலையில் சீனா எவ்வாறு இதை கட்டுப்படுத்தியது. அங்கு தான் சீனா தனது தந்ரோபாய பொருளாதார ஆட்டத்தை ஆரம்பித்தது. தற்பொழுது எல்லோருடைய மனங்களில் உள்ள சந்தேகத்தை தான் நாமும் இங்கே எழுத வினைகின்றோம் பொருளாதார ரீதியிலோ அல்லது இராணுவ ரீதியாகவோ அமெரிக்காவை வெல்ல முடியாது. அத்துடன் இந்தியா, அமெரிக்கா பொருளாதார இணைவு சீனாவுக்கு மிகக் கசப்பாக தோன்றியது. இதற்கெல்லாம் முடிவுகட்ட கொரோனா வைரஸ் என்றும் ஆயுதத்தை சீனா உற்பத்தி செய்தது.

என்ன மடத்தனமாக யோசிக்கின்றீர்கள் என நீங்கள் கேட்பது புரிகின்றது. கொரோனா வைரஸை உற்பத்தி செய்து தனது நாட்டு மக்களை கொல்ல சீனா ஏன் துணிய வேண்டும் என நீங்கள் திகைப்பது புரிகின்றது. சீனா வைரஸை உலக வல்லரசுகள் மீது செலுத்த முடிவு செய்ததற்கு ஒரு சித்தார்ந்தம் உள்ளது. ஒருவன் பகை வனான பக்கத்து வீட்டுக்காரனுக்கு கல் எரிய வேண்டுமாயின் முதலில் தனது வீட்டிற்கு கல் எரிய வேண்டும். அதுபோல தனது பகையான நாடுகளுக்கு இவ் வைரஸை அனுப்ப முன்னர் தனது நாட்டுக்கு அது பரவ இடமளிக்க வேண்டும். அதற்கு தெரிவு செய்த மாகாணம் வுகான் மாகாணம் சீனாவில் மிகவும் பின் தங்கிய மாகாணமாகவும், விபச்சாரம், நாய் பூனை போன்ற மிருகங்களை அதிகம் உண்ணும் மக்கள் வாழும் பகுதியாகவும் இது காணப்படுகின்றது. ஓரினச்சேர்க்கையும் இங்கேயே தான் அதிகமாக உள்ளது. (ஆண் ஆணையும், பெண் பெண்ணையும் திருமணம் செய்யலாம்) ஆகவே தனது வைரஸை அந்த மாகாணத்தில் பரிசீலித்தது. அம் மாகாணங்களிலிருந்து தனது பொருளாதார மையங்கள் நிறைந்த சங்காய், பீஜிங் போன்ற மாகாணங்களில் பரவாமல் பார்த்துக்கொண்டதுடன், உயிரிழப்புக்களையும் ஓரளவுக்கு கட்டுப்படுத்திநோய்த்தொற்றின்வேகத்தையும் மிகவும் வேகமாக முறியடித்துக்கொண்டது.

எந்தவொரு நாடுகளின் துணையுமின்றி வெறும் 2 மாதங்களில் கட்டுப்படுத்தி தனது உற்பத்தி நிறுவனங்களின் பொருட்களையும் உற்பத்தி செய்யத் தொடங்கியுள்ளது. இதிலிருந்து உங்களுக்கு புரியும் என்று நினைக்கின்றேன். சீனாவின் விபரீத விளையாட்டின் இவ்வாறான நிலை உலக நாடுகள் மிக மோசமான பாதிப்பை சந்தித்து வரும் நிலையில் தற்பொழுது சீனா தனது நாட்டின் அனைத்து மாகாணங்களில் இருந்த ஊரடங்கு உத்தரவை நீக்கியதுடன் தொழில் உற்பத்திகளையும் ஆரம்பித்தது.

இது உலக நாடுகளுக்கு இடையில் அதிருப்தியும் எரிச்சலையும் ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்கா, ஜப்பான், பிரிட்டன் போன்ற நாடுகள் பகீரங்கமாக அதன் செயற்பாடுகளை குற்றம் சாட்டியுள்ளனர். இதற்கு ஒருபடி மேலே போய் ஜப்பான், சீனாவின் தில்லாலங்கடி ஆட்டத்தை முற்றுப்புள்ளிவைக்க முனைந்துள்ளது. தனது நாட்டிலுள்ள சீனா உற்பத்தி நிறுவனங்களை உடனடியாக மூடிவிட்டு வெளியேறுமாறு பணித்துள்ளது. இதனை அமெரிக்காவும் தொடர்ந்து மேற்கொண்டுள்ளது. கொரோனாவால் நாட்டுக்குள் நாடு தனிமைப்பட்டது போல சீனாவை தனிப்படுத்த ஐரோப்பிய நாடுகள் முடிவு செய்துள்ளதாக தெரியவருகின்றது.

**மிக விரைவில் சீனாவின் தொழில் நிறுவனங்களை தத்தம் நாடுகளிலிருந்து வெளியேற்றி சீனாவை தனிமைப்படுத்தும் நடவடிக்கையில் உலக நாடுகள் இறங்கும் என்பது தெளிவாக தெரிகிறது. முதலில் இந்தியா, அமெரிக்கா என்ற இரு நாடுகளை சமாளிப்பதற்கு தினறிய சீனா இன்று உலக நாடுகள் எல்லாவற்றையும் தனக்கு எதிராக திரட்டியுள்ளது. இதிலிருந்து சீனா எவ்வாறு மீண்டு தனது பொருளாதார நிலையில் முதலாம் இடம் என்ற கனவை எவ்வாறு நிறைவேற்றப்போகின்றது என்பதை காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.**

கிறுக்கன்

# இலங்கையின் பொருளாதார வீழ்ச்சியை கட்டியெழுப்புவதே இன்றைய சூழ் நிலையின் அவசியம்



ஆசியா கண்டத்திலே மிக முக்கியமான நாடாக இலங்கை காணப்படுகின்றது. அதற்கு காரணம் இலங்கையின் திருகோணமலையில் காணப்படும் இயற்கைத் துறைமுகம் மற்றும் தேயிலை, இறப்பர் என்பனவற்றின் ஏற்றுமதி ஆசியாவில் மிக அதிகமாக காணப்படுவதே ஆகும். இலங்கை மிகப்பெரிய ஒரு விவசாய நாடாக ஒல்லாந்தர் ஆட்சிக்குப் பின் உருவெடுத்தது. பெருந்தோட்டப்பயிர்களாக தேயிலை, கோப்பி, இறப்பர், தெங்கு மற்றும் வாசனைத்திரவியங்கள் என்பன அதிகமாக பயிரிடப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டன. குறிப்பாக தேயிலை ஏற்றுமதி இலங்கை பொருளாதாரத்தில் மிகப்பெரும் பங்கு வகித்து வந்துள்ளது. இலங்கை தேயிலையானது உலகளவில் பெரும் வரவேற்பை பெற்று காணப்பட்டது. 1978 க்கு பின்னர் கைத்தொழில் துறை வளர்ச்சியடைய தொடங்கியது. 1978 க்கு முன்னர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலத்தில் தன்னிறைவு பொருளாதார கொள்கை காணப்பட்டதுடன் விவசாயம் மிக வேகமாக முன்னேறி வந்தது. குறிப்பாக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. இதனால் எமது தேவையை நாமே பூர்த்தி செய்ய வேண்டிய தேவை இருந்தது. அக்காலகட்டத்தில் மாவட்டத்திற்கு மாவட்டம் அரிசி கொண்டுசெல்ல முடியாத சூழ்நிலை காணப்பட்டது. குறிப்பாக வவுனியா, கிளிநொச்சி போன்ற பகுதிகளிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நெல்லை ஏற்றுமதி செய்வது தடை செய்யப்பட்டது. அந்த மாவட்டங்கள் தத்தம் தேவையை தாமே பூர்த்தி செய்ய வேண்டிய சூழ்நிலை அப்பொழுது காணப்பட்டது.

1978க்கு பின்னர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சிக்காலத்தில் திறந்தநிலை பொருளாதார கொள்கை உருவாக்கப்பட்டதுடன் வெளி நாடுகளிலிருந்து பொருட்கள் இறக்குமதி செய்யத் தொடங்கியதன் பின்னர் கைத்தொழில் துறை விருத்தியடையத் தொடங்கியது. விவசாய நடவடிக்கைகள் குறைவடையத் தொடங்கியது. தற்பொழுது உலகை அச்சுறுத்தும் கொரோனா தொற்றால் இலட்சக்கணக்கான உயிர்கள் காவு கொல்லப்பட்டதுடன் பல இலட்சக்கணக்கானோர் நோய்த் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இந்த நிலையில் உலக நாடுகள் மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியை சந்திக்கவுள்ளனர். எமது நாடும் மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியை சந்திக்கப்போகின்றது. கடந்த பெப்ரவரி மாத இறுதி வாரத்திலிருந்து சகல பொருளாதார நிலைகளும் மூடப்பட்டு ஒட்டுமொத்தமாக நாடே முடக்கப்பட்டுள்ளது.

எமது நாட்டில் மிக முக்கிய விவசாய ஏற்றுமதிகளான தேயிலை, இறப்பர், கோப்பி மற்றும் வாசனைத்திரவியங்களான அனைத்தும் முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளதுடன் அத்துடன் சுற்றுலாத்துறை, விமானப் போக்குவரத்துக்கள், ஆடைக் கைத்தொழில்கள் என்பன முற்றாக நிறுத்தப்பட்டுள்ளன. கடந்த 30 ஆண்டுகால கோர யுத்தத்தில் ஏற்படாத பாரிய பொருளாதார வீழ்ச்சியை தற்பொழுது இலங்கை சந்திக்கவுள்ளது. நாட்டில் கொரோனா யுத்தத்தின் தாக்கம் முடிவடைந்தாலும் அதன் பின்னர் பொருளாதார நிலையை எவ்வாறு கட்டியெழுப்புவது என்பதில் அரசு தீவிர கவனம் செலுத்த தொடங்கியுள்ளது. எமது நாட்டின் பொருளாதாரத்தின் மிகப்பெரிய தூண்களாக உள்ள விவசாயத்துறையையும் கைத்தொழில் துறையையும் ஒருங்கே சமாந்தரமாக முன்னெடுக்க வேண்டும். குறிப்பாக விவசாயத் துறையை உடனடியாக மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். விவசாயம் செய்வதற்கான பல நிலங்கள் வெறும் தரிசு நிலங்களாக உள்ளன. குறிப்பாக வடபகுதியில் பல நிலங்கள் தரிசு நிலங்களாக உள்ளன. விவசாயத்தை மேற்கொள்ள நிதியின்மை விவசாய உற்பத்திக்கு தகுந்த சந்தை வாய்ப்புக்கள் இன்மை விவசாயம் மேற்கொள்வதில் முன்பிருந்த அக்கறையின்மை வடபகுதியிலிருந்த பல விவசாய குடும்பங்கள் விவசாயத்தை விட்டு வேறு தொழில்களுக்குச் சென்றமை போன்ற காரணங்களினால் விவசாயத் துறை வீழ்ச்சியின் பாதையில் சென்றுள்ளது.

இதனை கட்டியெழுப்ப வேண்டுமாயின் அரசு பல மானியங்களை வழங்க வேண்டும். விவசாயிகளுக்கு கடன் உதவிகளை தற்பொழுது வங்கிகளினூடாக வழங்கி விவசாயத்தை ஊக்கப்படுத்த வெண்டும். அத்துடன் சந்தை வாய்ப்புக்களும் அதிகரிக்க வேண்டும். தேவையான காலத்தில் தேவையான பயிர்களை செய்வதற்கு விவசாயத் திணைக்களங்கள் விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கி கூட்டு பயிர்த்திட்டத்தை மேற்கொள்ள வேண்டும். வடகிழக்கு பகுதிகளில் குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற மாவட்டங்கள் அதிகளவில் நெல் உற்பத்தியை மேற்கொள்கின்றது. இவ் மாவட்ட விவசாயிகள் நெல் பயிரிடல் நேரங்களில் பல அசௌகரியங்களை சந்திக்கின்றனர். நெல்லிற்கு சரியான விலையின்மை, உரமானியங்கள் சரியான முறையில் கிடைப்பதில்லை, மழையின்மை போன்ற காரணங்களால் நெல் பயிரிடல் குறைந்துபோக தொடங்கியுள்ளது.

எனவே தற்பொழுது நாடு சந்தித்து வரும் பொருளாதார வீழ்ச்சியை தடுத்து பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாட்டை பாதுகாக்க வேண்டுமாக இருந்தால் விவசாய துறையில் சகல மக்களும் உத்வேகத்துடன் முன்னெடுக்க வேண்டும். வீடுகள் தோறும் இடம் இருக்குமாயின் தமக்கு தேவையான மரக்கறிகளை தாமே உற்பத்தி செய்து தேவையை பூர்த்தி செய்ய வேண்டும், கிராமங்களில் விவசாயத்தை ஊக்கப்படுத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும், கிராம மக்களுக்கு நிலைமைகளை விளக்கி தமது தேவைகளை தாமே பூர்த்தி செய்யும் செயற்திட்டத்தை உருவாக்க வேண்டும், கிராமங்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள விதைகள் பயிர்கள் என்பனவற்றை இலவசமாக வழங்கி ஊக்கப்படுத்துதல் வேண்டும். அதனை மாவட்ட ரீதியாக கொண்டுசெல்லவேண்டும். மாவட்டங்கள் தங்கள் தேவைகளை தாமே பூர்த்தி செய்யும் நிலைக்கு கொண்டு செல்ல வேண்டும்.

தற்பொழுது அமுலிலுள்ள ஊரடங்கு சட்டம் மாவட்டங்களிற்கு இடையேயான போக்குவரத்து முற்றாக இடை நிறுத்தப்பட்டதால் ஊரடங்கு தளர்த்தப்படும் பொழுது சில அவதானிப்புக்களை பார்க்கும் பொழுது அந்தந்த மாவட்டங்களில் பயிரிடப்படும் பெரும்பாலான உற்பத்தி மரக்கறிகள் வந்து குவிந்து கிடப்பதை காணக்கூடியதாக உள்ளது. ஆகவே மாவட்டங்களில் விவசாயத்தை மேலும் அதிகரித்து தமது தேவைகளை பூர்த்தி செய்வதுடன் நெருக்கடி நிலைமைகளையும் சமாளிக்க முடியும். அத்துடன் மலையக தேயிலை தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சனைகளை தீர்த்து தேயிலை உற்பத்தி மற்றும் பெரும்போக உற்பத்தி பொருட்களை அதிகரிக்க வேண்டும். அரசு அதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

1990க்கு முன்னர் இலங்கை தேயிலை ஏற்றுமதியில் உயர்ந்த நிலையில் காணப்பட்டது. தற்பொழுது அதில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. முன்பு இலங்கையிலிருந்து 75 வீதம் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது. தற்பொழுது இந்தியா, சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் தேயிலை பயிரிடல் மேற்கொள்ளப்பட்டமையும் இலங்கை தேயிலையின் தரம் தற்பொழுது குறைந்து காணப்படுகின்றமையும், தேயிலை தோட்ட முதலாளிமார் உற்பத்தியில் கவனம் செலுத்தாமை, இயற்கை அனர்த்தங்கள், தொழிலாளர் பிரச்சனை, விவசாய துறையிலிருந்து கைத்தொழில் துறைக்கு அரசு கவனம் செலுத்த தொடங்கியமை என்பன எமது நாட்டின் தேயிலை ஏற்றுமதியில் வீழ்ச்சி காணப்பட்டது. தற்பொழுது உலக நாடுகள் கொரோனாவால் தடுமாறிய நிலையில் மலையகப் பகுதிகளில் கொரோனா தொற்று அதிகம் காணப்படாமையினால் எமது தேயிலை, இறப்பர், வாசனைத்திரவியங்களை அதிகளவில் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதன் மூலம் பொருளாதார நெருக்கடியை ஓரளவு சமாளிக்க முடியும்.

அத்துடன் ஆடைக்கைத்தொழில் நடவடிக்கைகளை அதிகப்படுத்துவதுடன் உலகநாடுகளுக்குத்தற்பொழுது அவசரமாக தேவைப்படும் முகக்கவசங்கள், கொரோனா தொற்றிலிருந்து வைத்தியர்கள் மற்றும் தாதிமார்களை பாதுகாக்கும் உடைகளை தயாரித்து தேவைப்படும் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல், சிறு கைத்தொழில்களை ஊக்கப்படுத்தல், கோழி வளர்ப்பு, மிருக வளர்ப்பு முறைகளை ஊக்கப்படுத்தல்,

பெண் தலைமைத்துவ குடும்பங்களை தெரிவு செய்து அவர்களுக்கு இவற்றை வளர்ப்பதற்கான உதவிகளை செய்தல் போன்றவற்றினூடாக வரவிருக்கும் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க முடியும். கொரோனா வைரஸை முறியடிக்க எவ்வாறு அனைவரும் இன, மத பேதமின்றி இணைந்தோமோ அதே போல் வரவிருக்கும் பொருளாதார நெருக்கடியிலும் அனைவரும் இணைந்து மீட்டெடுக்க வேண்டும் என்பதே இப்போதுள்ள நிலைமையாகும்.

அரசியல் கட்சிகள் இது தான் சந்தர்ப்பம் என்று அரசியல் செய்யாமல் அனைவரும் ஒற்றுமையாக கைகோர்த்து பொருளாதார நெருக்கடியில் இருந்து எமது நாட்டை காப்பாற்ற முன்வரவேண்டும் என்பதே எமது காலத்தின் கட்டாயமாகும்.

**தாயகத்தான்**

# இரசாயன ஆயுதத்தை கொண்டே இனி உலகில் யுத்தம் இடம்பெறும்



கடந்தவார தொடர்ச்சி...

இதற்காக அம்பந்தோட்ட துறைமுகத்தை 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு எடுத்திருக்கிறது.

இதனால் இந்திய கடல் பகுதியின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை சீனா ஏற்படுத்த வாய்ப்பு உருவாகியுள்ளது. இந்திய பெருங்கடல் பிராந்தியத்தை யார் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார்களோ அவர்களே அடுத்த வல்லரசு என்ற வாதம் பெரும்பாலும் முதன்மையாக முன் வைக்கப்படுகிறது. தற்பொழுது சீனாவின் கட்டுப்பாட்டிலுள்ள அம்பந்தோட்ட துறை முகம் இந்திய பெருங்கடல் பிராந்தியத்தை நோக்கி இருப்பதால் சீனாவால் இந்தியாவிற்கு ஆபத்து இருப்பதாகவும் இந்திய பெருங்கடல் பிராந்தியத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் சீனா கொண்டுவரும் என அமெரிக்கா ஐரோப்பிய நாடுகள் எச்சரிக்கை விடுக்கின்றன.

இந்த எச்சரிக்கை சமிஞ்சை அடங்குவதற்குள்ளாகவே இலங்கையின் கொழும்பு துறைமுகத்தில் 2 நீர்மூழ்கி கப்பல்களை நிறுத்தியது சீனா. இந்த நீர் மூழ்கி கப்பல்கள் மூலம் இந்தியாவிற்கு சீனா போர் எச்சரிக்கை விடுத்ததாக கடந்த 2018 ஆம் ஆண்டு கூறப்பட்டது. இந்தியாவின் வடக்கு எல்லையான டோக்குலாம், வடகிழக்கு எல்லையான அருணாசல பிரதேசத்தின் இந்தியாவை வம்புக்கு இழுப்பது போலவே தெற்கு எல்லையான இந்திய பெருங்கடல் பிராந்தியத்தையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து தெற்காசியாவில் தன்னைவிட பலம் வாய்ந்த ஒரு நாடு இருக்கவே கூடாது என்று இந்தியாவை மறைமுகமாக மிரட்டி வருகிறது. பாகிஸ்தான் மற்றும் சீனாவிற்கு இடையே புதிய பட்டுப்பாதையை இணைப்பதன் மூலம் இந்தியாவிற்கு சீனா தற்பொழுது செக் வைத்திருக்கிறது. சீனாவில் ஏற்பட்ட புரட்சிக்குப் பின் அந் நாடு அடைந்த அபரிவிதமான வளர்ச்சியை யாராலும் மறுக்க முடியாது. இதற்காக அந்த நாடும் நாட்டு மக்களும் செய்த தியாகம் மிகப்பெரியது.

இதனால் இன்றைய சூழலில் உலகின் எல்லா மூலையிலும் சீனாவின் தொழினுட்பம் தான் பெருமளவில் பயன்பாட்டில் இருக்கின்றன. இதனைவிட கூடிய உச்சத்தை அடைய வேண்டுமென சீனா பல்வேறு வியூகங்களை அமைத்திருக்கிறது. அதில் முக்கியமாக இருப்பது சீனா பாகிஸ்தான் பொருளாதார வழித்தடம். சீனா பாகிஸ்தான் பொருளாதார வழித்தடத்தின் மூலம் ஐரோப்பா ஆசியா என 2 கண்டங்களின் ஒட்டுமொத்த நுகர்வோர் சந்தையையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் திட்டத்தை சீனாகையில் எடுத்திருக்கிறது. இந்த பாகிஸ்தான் சீனா பொருளாதார வழித்தடத்திற்கும் இந்தியா தான் முட்டுக்கட்டையாக இருக்கிறது. இருப்பினும் இந்தியாவை சமாதானப்படுத்தி இந்த திட்டத்தின் உறுப்பு நாடாக இந்தியாவையும் மாற்ற வேண்டும் என்ற முயற்சியில் சீனா இறங்கியிருக்கிறது.

இந்தியாவை விட சிறந்த பொருளாதார கட்டமைப்பு கொண்ட நாடாக சீனா தன்னை உருவாக்கிக்கொள்வதற்காக ஒபார் எனப்படும் வன்பல் வன்ரோட் என்ற சூழல் ஒரு பாதை என்ற திட்டத்தை செயற்பட துடிக்கிறது. அத்துடன் பழைய ஐரோப்பிய நாடுகளையும் ஆசிய நாடுகளையும் ஒன்றிணைக்கும் வகையிலும் பட்டுப்பாதை திட்டம் ஒன்று ஏற்கனவே இருந்தது. இதனை தற்பொழுது தூசு தட்டி கையில் எடுத்திருக்கிறது சீனா. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் வழியாக இந்த புதிய பட்டுப்பாதை செல்வதால் அதில் சேர்வது குறித்து எதிர்மறை கருத்தில் இருக்கிறது இந்தியா. இப்படி டோக்குலாம் எல்லை அருணாசல பிரதேச எல்லை அம்பந்தோட்ட துறைமுகம் பாகிஸ்தானில் புதிய பட்டுப்பாதை அமைப்பு என இந்தியாவை சுற்றி ஒரு சிலந்தி வலையை இந்தியாவிற்கு எதிராக சீனா பின்னி வருவதை நம்மால் கவனிக்க முடிகிறது. இலங்கை அம்பந்தோட்டதுறைமுகம் மூலமாக இந்திய பெருங்கடல் பிராந்தியத்தை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தால் அதன் மூலம் இந்தியாவின் வளர்ச்சியை தடுத்து நிறுத்த சீனா வியூகத்தை உருவாக்கியுள்ளது. இதற்காக சீனா தனது மற்றுமொரு ஆயுதத்தையும் கையில் எடுத்துள்ளது. அதுதான் இந்தியா பாகிஸ்தான் இடையிலான பகை உணர்வு. இந்தியா பாகிஸ்தான் இடையில் வரலாற்று ரீதியாக இருக்கும் பகை உணர்வை தூண்டி விட்டு அதன் மூலம் இந்தியாவை நெருக்கடியில் ஆழ்த்த சீனா திட்டங்களை வகுத்து செயற்படுகிறது.

இந்த சூழலில் தான் பாகிஸ்தானை தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ள பாகிஸ்தானுக்கு உதவுவது போன்ற காரியங்களை கையில் எடுத்தது. அப்பொழுது தான் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் டுவிட்டரில் செய்த பதிவு ஒன்று அதற்கு சாதகமாக அமைந்தது. அதாவது தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கையை அமெரிக்கா கையில் எடுத்த பொழுது பாகிஸ்தான் தான் தீவிரவாதத்தை ஊக்குவிப்பதாக உலக நாடுகள் முறையிட்டனர். பாகிஸ்தானில் தீவிரவாதம் ஊக்குவிக்கப்படவில்லை என்றும் அதற்காக தீவிரவாத குழுக்களுக்கு எந்த நிதியும் அளிக்கவில்லை என வெளிப்படையாக அறிவித்த நவாஸ் ஷெரிப் அமெரிக்காவின் தீவிரவாத ஒழிப்பிற்கு பாகிஸ்தான் எப்பொழுதும்துணைநிற்கும் என கூறினார். இருப்பினும் அந்த வார்த்தைகளை நம்பாத ட்ரம்ப் அமெரிக்க தலைவர்களை பாகிஸ்தான் அரசு முட்டாள்களாக நினைத்துக் கொண்டிருப்பதாக கொந்தளித்தார். அத்துடன் நிறுத்திக் கொள்ளாமல் ஆப்கானிஸ்தானில் பயங்கரவாதிகளை ஒழிக்க அமெரிக்கா தீவிரம் காட்டி வரும் நிலையில் அங்கிருந்து தப்பிய பயங்கரவாதிகள் பாகிஸ்தானில் தஞ்சம் அடைவதாகவும் அவர்களுக்கு அமெரிக்காவின் நிதிகளை கொண்டே பாகிஸ்தான் உதவிகளை செய்து வருவதாகவும் குற்றம் சாட்டினார். தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கையில் பாகிஸ்தான் தங்களை ஏமாற்றுவதாக பகீரங்கமாக அறிவித்த அமெரிக்கா பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்டு வந்த நிதியுதவியை நிறுத்துவதாகவும் தீவிரவாதத்திற்கு எதிராக பாகிஸ்தான் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை பொறுத்தே அடுத்தகட்டமாக நிதியுதவிகளை தொடரலாமா அல்லது நிறுத்தலாமா என்றும் முடிவு செய்ய முடியுமென அறிவித்தது. வெறும் பேச்சுக்காகவோ பாகிஸ்தானை பணிய வைக்க வேண்டும் என்பதற்காகவோ இந்த அறிவிப்பை அமெரிக்கா வெளியிடவில்லை. மேலும் அமெரிக்காவின் நிதியுதவிகளை நம்பி பாகிஸ்தான் பல வளர்ச்சித் திட்டங்களையும் கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாகவே மேற்கொண்டு வந்தது. குறிப்பாக தீவிரவாத ஒழிப்பு என்ற பெயரில் அமெரிக்காவிடமிருந்து சுமார் 33 பில்லியன் அமெரிக்கா டாலர்களை பாகிஸ்தான் கடனாக பெற்றிருக்கிறது. பாகிஸ்தான் மீதான அமெரிக்காவின் கோபத்தால் அந் நாடு இரண்டு விதமான ஆபத்துக்களை சந்திக்க வேண்டிய சூழல் ஏற்பட்டிருக்கிறது. ஒன்று அமெரிக்காவின் நிதி நிறுத்தப்படுவதுடன் அமெரிக்காவிடம் ஒரு கடனாளியாக இருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது.

உலக நாடுகளின் அதிகாரம் ஒரே இடத்தில் குவிந்து கிடக்கும் அமெரிக்காவிடம் பகைத்துக் கொண்டு நம்மால் முன்னேற்றத்தை அடைய முடியுமா என்பது தான் இரண்டாவது. அந்த இரண்டு விளைவுகளும் மிகப்பெரிய தாக்கத்தை பாகிஸ்தானில் ஏற்படுத்தும் என்பது அந்நாட்டிற்கு தெரிந்திருந்தது. இந்த இடத்தில் அமெரிக்காவின் குற்றச்சாட்டுகளுக்கு மௌனம் காத்தால் அவர்கள் கூறுவது உண்மையாகிவிடும் என கருதிய பாகிஸ்தான் தான் நிரபராதி என்பதை நிரூபிப்பதற்காக அமெரிக்காவிற்கே பதிலடி கொடுத்தது. அமெரிக்கா நினைப்பது போல எந்த தீவிரவாத நடவடிக்கைகளும் பாகிஸ்தானில் நடக்கவில்லை என்றும் தீவிரவாதத்தை ஊக்குவிக்கவில்லை என்றும் கூறிவந்தது. தொடர்ந்தும் அமெரிக்கா அழுத்தம் கொடுக்க கொடுக்க அடுத்து என்ன செய்யலாம் என்று மாற்று யோசனையில் பாகிஸ்தான் இறங்கியது. அப்பொழுது தான் பாகிஸ்தானிற்கு கைகொடுப்பதற்காக களத்தில் இறங்கியது சீனா. சீனாவின் தயவு தனக்கு கிடைக்கும் என்ற சூழல் ஏற்பட்டவுடன் அமெரிக்காவுடனான உறவை முறித்துக்கொண்டு சீனாவுடனான உறவை புதுப்பிக்க களத்தில் இறங்கியது பாகிஸ்தான்.

அதாவது அமெரிக்க டாலருக்கு பதிலாக இனி சீனாவின் யுவானை பாகிஸ்தானின் பொதுத்துறை நிறுவனங்களுக்கும் தனியார் நிறுவனங்களுக்கும் தாராளமாக பயன்படுத்தலாம் என பாகிஸ்தானின் ஸ்டேட் வங்கி அறிவித்தது. அமெரிக்காவை எதிர்க்கவும் அதே சமயத்தில் தனது போட்டி நாடான இந்தியாவின் வளர்ச்சியை தடுக்கவும் ஒரே கல்லில் இரண்டு நாடுகளையும் அடிப்பதற்காக பாகிஸ்தானை தனக்கு சாதகமாக ஆக்குவதற்கு சீனா இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்தது. சீனாவின் இந்த முயற்சிக்கு காலம் மிகச்சரியான வாய்ப்பை அளிப்பது போல இருந்தது பாகிஸ்தான் அமெரிக்கா இடையிலான வார்த்தைப் பொருள். இதனை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்வதற்காக பாகிஸ்தானை தனிமைப்படுத்தும் அமெரிக்காவின் போக்கை தனக்கு ஆதரவாக பயன்படுத்திக் கொள்ள பாகிஸ்தானிற்கு ஆதரவுக்கரம் நீட்டியது சீனா.

அதாவது பயங்கரவாதத்தை தடுப்பதற்காக பாகிஸ்தான் எந்த நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை என அமெரிக்கா அபாண்டமான குற்றச்சாட்டுகளை முன்வைப்பதாக சீனா கொந்தளித்தது. பயங்கரவாத ஒழிப்பிற்கு பாகிஸ்தான் செய்த தியாகங்கள் அமெரிக்காவிற்கு தெரியாதா? பாகிஸ்தானின் எத்தனை அதிபர்கள் பயங்கரவாதத்திற்காக தங்களின் உயிரை இழந்திருக்கிறார்கள் என்று அமெரிக்காவிற்கு தெரியாதா என இரக்கப்பார்வை நீட்டியது. இதனால் மெய் சிளிர்த்துப்போன பாகிஸ்தான் சீனாவின் குரலுக்கு மனம் மகிழ்ந்தது. பாகிஸ்தானின் இந்த மன மகிழ்வை சாதகமாக பயன்படுத்திக்கொண்ட சீனா அந்நாட்டை புதிய பட்டுப்பாதை திட்டத்தில் கையெழுத்திடச் செய்தது. பட்டுப்பாதை பொருளாதார வழித்தடை திட்டத்தை 55 பில்லியன் டாலர் மதிப்பில் செயற்படுத்த திட்டம் விடப்பட்டுள்ளது. இந்த திட்டம் பாகிஸ்தானிற்கு உதவும் என அந்நாடு நம்புகிறது. ஆனால் சீனாவின் கணக்கோ வேறு. பாகிஸ்தானை தனது காலனிநாடாக வைத்திருக்க வேண்டும் என்பதற்காகவே இந்த திட்டத்தை சீனா செயற்படுத்துவதாக கூறப்படுகிறது. இது வீண் அபாண்டமான குற்றச்சாட்டில்லை.

கடந்த 2 ஆண்டுகளாக பாகிஸ்தானின் பல்வேறு பகுதிகளிலும் சீனாவிற்கு எதிராகவே பாகிஸ்தானின் குடிமக்கள் போராட்ட களத்திற்கு வந்துவிட்டனர். அப்பொழுது எல்லாம் சீனா பாகிஸ்தான் அரசை தூண்டி விட்டு அந்நாட்டு மக்கள் மீது வன்முறைகளை பிரயோகிப்பதாக குற்றச்சாட்டு எழுந்திருக்கிறது. அம்பந்தோட்ட துறைமுகத்தை தனக்கு உரிமையாக சீனா சொந்தம் கொண்டாடிய போதும் இலங்கையில் இதே போன்ற போராட்டங்கள் தான் வெடித்தன.

7ஆம் பக்கம் பார்க்க...

இரணியன்

6ஆம் பக்க தொடர்ச்சி...

அப்பொழுது ரணில் விக்ரமசிங்க போன்றவர்கள் இது இலங்கையின் வளர்ச்சிக்கு சீனா உதவும் என்றே கூறுகின்றனர். ஆனால் மக்களின் முடிவோ வேறு ஒன்றாக இருக்கிறது. இலங்கை பாகிஸ்தானில் மக்கள் போராட்டத்தை திரை மறைவில் இருந்து கொண்டு சீனா அடக்கி வைக்க ஆயுதங்கள் வழங்குவதாக கூறப்படுகிறது.

இந்த திட்டத்தின் மூலமாக சீனா மற்றுமொரு திட்டத்தையும் மறைத்து வைத்துள்ளது. அதாவது பாகிஸ்தான் சீனா இடையில் உருவாகியுள்ள பொருளாதார வழித்தடம் திட்டம் தொடங்கும் பாதை அமைந்துள்ள இடத்தில் இராணுவ தளத்தை அமைக்கும் முயற்சியிலும் சீனா இறங்கியுள்ளது. பாடர் துறைமுகத்திலிருந்து 90 கிலோமீற்றர் தூரத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த இராணுவத்தளபாடம் அமைக்கும் பணிகள் இன்னும் சில மாதங்களில் நிறைவுபெற இருப்பதாக கூறப்படுகிறது. இதன் மூலம் இந்தியா, ஆப்கானிஸ்தான், ஈரான், ஈராக், பாகிஸ்தான் இலங்கை உள்ளிட்ட நாடுகளை நோக்கியும் ஏவுகணை பார்வைகளை நிறுத்தப்போகிறது சீனா. தங்களின் பொருளாதார ஒத்துழைப்புக்களை அழிக்காத நாடுகளை முடிவுறை எழுதுவதற்காகவே இந்த ஏவுகணை குறியை சீனா வைத்திருப்பதாக கூறப்படுகிறது.

சீனாவின் இந்த முன்னெடுப்புக்கு முக்கிய காரணம் 2030 ஆம் ஆண்டு 40 மில்லியன் டன் சரக்குகளை கையாளும் அளவிற்கு வளமான இடமாக இது மாறப்போகிறது. அத்துடன் மத்திய ஆசியா மற்றும் மேற்கு சீனாவுக்கு சரக்கு எடுத்துச் செல்லும் கேந்திரமாகவும் இது மாறப்போகிறது.

இந்த சூழலில் தான் தன்னை சுற்றி இருக்கக்கூடிய நாடுகளை சில சமயங்களில் மிரட்டியும் பல சமயங்களில் அந்த நாடுகளில் இருக்கும் பலவீனங்களை தனக்கு சாதகமாக்கி சீனா வளைத்துப்போட்டுள்ளது. கடன் உதவி செய்வதன் மூலம் அந்த நாடுகளின் தற்கால வளர்ச்சியை சீனா முன்னிறுத்தினாலும் அடுத்த சில ஆண்டுகளிலே பாகிஸ்தான் இலங்கை உள்ளிட்ட நாடுகளை முழுக்க முழுக்க தனது காலணிய நாடுகளாக மாற்றும் முயற்சிகளிலும் சீனா ஈடுபட்டிருக்கிறது.

தற்போதைய சூழலில் தென்சீன கடல் பகுதியிலுள்ள பிலிப்பைன்ஸ், தாய்வான், வியட்னாம், மலேசியா போன்ற நாடுகளை தனது காலணிய நாடுகளாக மாற்றி வைத்துள்ளது சீனா. வெளிப்படையாக தெரியவில்லை என்றாலும் அடுத்த சில ஆண்டுகளில் சீனாவின் கட்டுப்பாட்டில் காலணிய நாடுகளாகத்தான் அந்த நாடுகள் இருப்பதை உணர்ந்துகொள்ள வேண்டிய சூழலை சீனா உருவாக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. அதே போல் சீனாவுடன் போட்டிபோடும் அளவுக்குள்ள இந்தியாவை அதனை சுற்றியுள்ள நாடுகளின் பலவீனமான பொருளாதார கட்டமைப்பை பயன்படுத்தி கட்டிப்போடும் முயற்சியிலும் சீனா இறங்கியிருக்கிறது. தற்போதைய சூழலில் ஐரோப்பா அமெரிக்க நாடுகளின் உள்நாட்டு கட்டமைப்பே கொரோனா தொற்றால் ஆட்டம் கண்டுள்ளது. இருப்பினும் சீனா நிலையான பொருளாதார கட்டமைப்பை நோக்கி பயணித்து விட்டது.

இந்த சூழலில் பார்த்தால் இந்தியாவில் கொரோனாவின் பாதிப்பு உலக நாடுகளில் ஒப்பிடுகையில் குறைந்தளவே உள்ளதால் தற்பொழுது இந்தியா மட்டுமே சீனாவிற்கு போட்டி நாடாக இருக்கிறது. அதனால் இந்தியாவை அடிபணிய வைக்க எந்த எல்லைக்கும் சீனா போகும் என்று கணிக்கப்படுகிறது. கொரோனா என்றஒற்றை ஆயுதத்தை கொண்டு ஒரே சமயத்தில் ஆசிய நாடுகளையும் அமெரிக்க ஐரோப்பிய நாடுகளையும் கட்டிப்போட்டிருக்கிறது சீனா. இதனால் இந்த நூற்றாண்டின் வல்லரசாக சீனா மட்டுமே இருக்கும் என்று சீன பொருளாதார வல்லுனர்கள் ஆருடம் கூறி வருகின்றனர்.

# திரைமறைவு அரசியல் நாடகங்களால் மக்கள் இக்கட்டான நிலைக்குள் தள்ளப்படும் ஆபத்து- சிவமோகன்



திரைமறைவுஅரசியல்நாடகங்களால் மக்கள் இக்கட்டான சூழ்நிலைக்குள் தள்ளப்படும் ஆபத்து உள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்திய காலநிதி சிவமோகன் தெரிவித்துள்ளார்.

ஊடக அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த அறிக்கையில் அவர் கூறுகையில்,

**“கொரோனா சூழலால் பொதுமக்கள் அதிகப்படியான மன அழுத்தத்திற்கும் பொருளாதார நெருக்கடிக்குள்ளும் தள்ளப்பட்டுள்ளார்கள்.”**

தங்களது தொழில்களை இழந்து பெரிய தொழிலாளர்கள் முதல் நாளாந்த வருமானம் பெறுபவர்கள் வரை தங்களது எதிர்காலம் என்னவாகுமோ என்ற ஏக்கத்தில் இருந்துகொண்டு தங்களது குடும்பத்தினரை எப்படிக் காப்பாற்ற முடியும் எனத் தவித்து வருகிறார்கள்.

சில குடும்பங்கள் ஒருவேளை உணவு உண்ணுவதற்குக் கூட வழியின்றி இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவ மனமுள்ள செல்வந்தர்கள் கூட வங்கிச் செயற்பாடுகள் முடக்கப்பட்டு இருப்பதால் ஏதும் செய்யமுடியாதுள்ளார்கள்.

**இப்படியான நிலையில் தேர்தலை நடத்துவது குறித்து பேசப்பட்டுவருகிறது. அப்படியாக இருந்தால் நாடு முழுவதும் கொரோனா ஒழிக்கப்பட்டது என அரசாங்கம் அல்லது சுகாதாரத் துறையினரால் பகிரங்கமாக அறிவித்தல் விடுக்கப்பட்ட பின்னரே தேர்தலை அறிவிப்பு வரவேண்டும்.**

அதனைவிட, குறைந்தது மூன்று மாதங்களாவது மக்கள் தங்களை மீள்கட்டுமானம் செய்து கொள்ள மக்களுக்கு வழி விடவேண்டும். அதன் பின்னர் தான் தேர்தல் ஆணையகம் தேர்தல் என்ற வார்த்தையை உச்சரிக்க வேண்டும்.

அதைவிடுத்து, ஒரு சில அரசாங்க அமைச்சர்களும் அரசாங்க கட்சியைச் சேர்ந்தவர்களும் வெறுமனே இரண்டு வாரங்கள் அறிவித்தலில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனக் கூக்குரல் இடுவது மக்களிடையே உளவியல் தாக்கத்தையே ஏற்படுத்தி வருகிறது என்பதுதான் யதார்த்தம்.

இந்த அரசாங்கம் வேட்பு மனுத்தாக்கல் செய்யும் காலத்துக்கு முன்னரே இந்த கொரோனா தாக்கம் உலகை ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்ததை நன்கு அறியும். ஆனால்ஏனையஅதிகாரிகள் இதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறியபொழுது எப்படியாவது வேட்பு மனுத்தாக்கலை முடித்துவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

**ரணில் ஒரு பக்கமும் சஜித் ஒரு பக்கமும் கயிற்றை இழுத்துக் கொண்டிருக்க ஒட்டு மொத்தமாக சேர்ந்து தற்போதைய அரசாங்கம் இந்தத் தேர்தலை மக்களிடம் பலாத்காரமாக திணித்தது என்பது தான் உண்மை.**

வேட்பு மனுத்தாக்கலுக்கு முன்னதாகவே இந்த விடயங்கள் வெளிப்படையாகத் தெரிந்தபொழுது ஒட்டுமொத்தமாக இலங்கையில் விமான நிலையங்களில் கட்டுப்பாட்டு நடைமுறைகளை விதித்திருந்தால் இவ்வளவு தூரத்திற்கு இந்த நாடு மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்காது.

இன்று இந்த ஊரடங்கு உத்தரவுகளால் மக்கள் படும் துன்பங்கள் சொல்லில் அடங்காதவை. எனவே இந்த அரசு ஏற்கனவே விட்ட தவறுபோல் மீண்டும் ஒரு முறை தவறிழைத்து மக்களை இக்கட்டில் தள்ளக் கூடாது.

எனவே தேர்தல் என்ற முயற்சியை உடனடியாகக் கைவிட்டு மக்களை இந்தக் கொடூரமான நோயிலிருந்து காப்பாற்றுவதற்கு அரசாங்கம் தொடர்ந்து உழைக்க வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.




# பிராந்தியச் செய்திகள்



## ஊரடங்கு தளர்த்தப்பட்ட நேரங்களில் மதுபானங்களை விற்க அனுமதி



ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்ட நேரங்களில் மதுபான கடைகள் மதுபானங்களை விற்க அனுமதிக்கப்படும் எனவும், இதன்போது பாதுகாப்பு விதி முறைகளை பின்பற்ற வேண்டும் என்றும் மதுவரி திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் போது குறித்த பிரதேசங்களில் உள்ள அனுமதி பத்திரம் உள்ள மதுபான கடைகளை திறப்பதற்கு கலால் திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## பூசணிக்காயை விற்பனை செய்யமுடியாது தவிக்கும் ஏழை விவசாயி

மன்னார் – நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மடுக்கரை கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட பூசணிக்காய் பயிர்ச்செய்கையினால் அதிக விளைச்சல் கிடைக்கப்பெற்றுள்ள போதிலும் பூசணிக்காயை விற்பனை செய்ய முடியாமல் ஏழை விவசாயி ஒருவர் தவித்து வருகிறார்.

சுமார் 4 ஆயிரம் கிலோ பூசணிக்காயை குறித்த விவசாயி அறுவடை செய்துள்ளார். குறித்த விவசாயிக்கு பாடசாலை செல்லும் மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

தோட்டச் செய்கையை வாழ்வாதாரத் தொழிலாக செய்து வரும் இவர் ஏற்கனவே கடனைப் பெற்று பூசணி செய்கையை மேற் கொண்டுள்ளார்.

தனது தோட்டத்தில் விளைந்து அறுவடை செய்து வைத்துள்ள சுமார் 4 ஆயிரம் கிலோ பூசணிக்காயை விற்பனை செய்ய முடியாமல் தவித்து வருகின்றார்.

நாடு சீராக இருந்த போது ஒரு ஏக்கர் பரப்பளவில் பூசணி பயிர் செய்துள்ளார். நல்ல விளைச்சல் கிடைத்துள்ளது. அறுவடை செய்யும் நேரத்தில் 'கொரோனா' வைரஸ் பிரச்சினையால் போக்குவரத்து தடை ஏற்பட்டு தம்புள்ளை மரக்கறி சந்தை சீராக இயங்கவில்லை.

இதனால் 4 ஆயிரம் கிலோ பூசணிக்காயை விற்பனை செய்ய முடியாமல் வீட்டில் உள்ள மூன்று அறைகளிலும் குவித்து வைக்கப்பட்டுள்ளன. தற்போதைய கொரோனா ஊரடங்கால் வாழ்வாதாரத்திற்கு பெரிதும் கஷ்டப்பட வேண்டி உள்ளது என குறித்த விவசாயி தெரிவித்துள்ளார்.

தோட்டம் செய்வதற்கு பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களை மீள செலுத்த வேண்டும். அரசாங்கம் மரக்கறி வகைகளை கொள்வனவு செய்வதாக அறிய முடிகின்றது. அது பற்றி எந்த முடிவும் இல்லை.

எனவே அரச அதிகாரிகள் எம்மீது அக்கறை கொண்டு இவற்றை விற்பனை செய்து தருவதற்கு நடவடிக்கை எடுத்து விவசாயிகளை காப்பாற்ற முன்வர வேண்டும் எனவும் அவர் கண்ணீரோடு கோரியுள்ளார்.

மேலும் பூசணி தேவைப்படும் உள்ளூர் வியாபாரிகள் 0772378121 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு பூசணிக்காயை கொள்வனவு செய்து உதவிபுரியுமாறும் அவர் தெரிவித்துள்ளார்.



## அத்தியாவசிய உணவுப் பொருட்கள் போதுமான அளவு கையிருப்பில் உள்ளதாக அறிவிப்பு!

நாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் போதுமான அளவு கையிருப்பில் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



உணவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஜே.கிருஸ்ணமூர்த்தி இதனைத் தெரிவித்துள்ளார்.

அரிசி, பருப்பு, ரின் மீன் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய, லங்கா சதொச, கூட்டுறவு விற்பனை நிலையங்கள் ஆகியவற்றினூடாக உணவுப் பொருட்களை மக்களுக்கு விநியோகிக்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களூடாக நிவாரண விலையில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை பகிர்ந்தளிக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகம் மறுஅறிவிப்பு வரும்வரை மூடப்படும்

பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற கல்வி நடவடிக்கைகள் மறு அறிவித்தல் வரும்வரை மூடப்படும் என அரசாங்கம் அன்று (சனிக்கிழமை) அறிவித்துள்ளது. முன்னதாக மே 11 ஆம் திகதி இரண்டாம் தவணை நடவடிக்கைக்காக பாடசாலைகளை மீண்டும் திறக்க அரசாங்கம் முடிவு செய்தது. இருப்பினும் பின்னர் ஏற்பட்ட நெருக்கடி நிலைமை காரணமாக இரண்டாவது தவணை ஏப்ரல் 20 ஆம் திகதி தொடங்க திட்டமிடப்பட்டது.




கொரோனா வைரஸை எதிர்த்துப் போராடும் நடவடிக்கைக்காக நாட்டில் தொடர்ந்து கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால், பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கு முன்பு சுகாதார அதிகாரிகளுடன் ஆலோசிக்க கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.இதேவேளை அனைத்து பல்கலைக்கழக ஊழியர்களுக்காக மே 4 ஆம் திகதியும், இறுதி ஆண்டு மாணவர்களுக்கு மே 11 ஆம் திகதியும் மற்ற அனைத்து மாணவர்களுக்கும் மே 18 ஆம் திகதியும் மீண்டும் திறக்கப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முன்னர் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனாவினால் பாதிக்கப்பட்ட நான்கு யாழ்ப்பாணத்தவர்கள் குணமடைந்தனர்!

பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் கண்காணிப்பிலிருந்த நிலையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி வெலிகந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நான்கு பேர், முழுமையாகக் குணமடைந்து இன்று வீடு திரும்பவுள்ளனர்.இந்தத் தகவலை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.அரியாலையைச் சேர்ந்த நான்கு பேரே இவ்வாறு முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பும் அவர்களை வெலிகந்தையிலிருந்து அம்புலன்ஸில் அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். அவர்கள் வீடுகளுக்கு திரும்பினாலும் 14 நாட்கள் சுயதனிமைப்படுத்தலுக்கு வீட்டிலேயே இருப்பார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.



யாழ்ப்பாணம் அரியாலை தேவாலயத்தில் சுவிட்ஸர்லாந்திலிருந்து வருகை தந்த போதகரால் கடந்த மார்ச் 15ஆம் திகதி நடத்தப்பட்ட ஆராதனையில் பங்கேற்றவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர். சுவிஸ் போதகருடன் நெருக்கமாகப் பழகிய மானிப்பாயைச் சேர்ந்த போதகர், சுவிஸ் போதகரின் சாரதி உள்ளிட்ட அரியாலை மற்றும் மானிப்பாய், வவுனியாவைச் சேர்ந்த 20 பேர் பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் கடந்த மார்ச் 23ஆம் திகதி நிறுவன தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்கள் 20 பேரிடமும் ஏப்ரல் முதலாம் மற்றும் மூன்றாம் திகதிகளில் மாதிரிகள் பெறப்பட்டு முதல்கட்ட பரிசோதனை நடத்தப்பட்டது. அதில் மானிப்பாயைச் சேர்ந்த மதபோதகர் உட்பட 6 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது. அவர்கள் 6 பேரும் வெலிகந்தை வைத்தியசாலை கொரோனா சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டனர். அவர்களில் நால்வரே இவ்வாறு முழுமையாகக் குணமடைந்துள்ளனர்.






காமெடி நடிகர் யோகி பாபு மற்றும் லேடி சூப்பர் ஸ்டார் நயன்தாரா இணைந்து கோலமாவு கோகிலா எனும் படத்தில் நடித்து வந்தனர்.

இதனை தொடர்ந்து தற்போது மீண்டும் இந்த காம்போ இணையப்போவதாக சில தகவல்கள் கசிந்துள்ளது.

மேலும் இப்படத்தை யோகி பாபு தான் இயக்க போவதாகவும் சில தகவல்கள் வெளிவந்திருந்தது.

ஆனால் இப்படத்தின் வசனம் மற்றும் திரைக்கையைதான் யோகிபாபுதனதுகையில் எடுத்துள்ளதாக தற்போது தெரிவந்துள்ளது.

மேலும் இதனை குறித்து அதிகாரப்பூர்வ தகவல் வெளிவரும் வரை நாம் பெருத்திருந்தது தான் பார்க்க வேண்டும்.



கன்னடத்தில் கடந்த ஃபிப்ரவரி 7 ம் திகதி காதலர் தினம் ஸ்பெஷலாக வெளியாகி கன்னடம் மட்டுமல்லாது, தமிழ், தெலுங்கு, மலையாளம் ரசிகர்களை மிகவும் கவர்ந்த படம் தியா. நல்ல வரவேற்பையும் விமர்சனங்களையும் பெற்றுள்ளது.

இப்படத்தை கே.எஸ்.அசோகா இயக்கியுள்ளார். இந்நிலையில் படத்தின் தயாரிப்பாள கிருஷ்ண சைதன்யா ரீமேக் செய்ய கடும் போட்டிகள் நிலவி வருகிறதாக கூறியுள்ளார்.

இதுவரை 60 தொலைபேசி அழைப்புகள் வந்துள்ளது. அனைத்து மொழிகளில் ரீமேக் செய்ய ஓர் இயக்குனர் முன்வந்தாராம். அவருடன் பேசி வருகிறோம்.

தெலுங்கிலும் ரீமேக் செய்ய அதிக அழைப்புகள் வருவதாகவும், தெலுங்கு டப்பிங் உரிமையை வாங்க அமெரிக்காவிலிருந்து ஒரு கோரிக்கை வந்ததாகவும் தயாரிப்பாளர் கூறியுள்ளார்.

மணிரத்னம் இயக்கத்தில் துல்கர் நடிப்பில் வெளிவந்து செம்ம ஹிட் அடித்த படம் ஓகே கண்மணி. இப்படம் தான் நீண்ட வருடத்திற்கு பிறகு மணிரத்னத்திற்கு ஹிட் அடித்த படம்.

இந்நிலையில் இப்படம் வெளிவந்து சுமார் 5 வருடங்கள் ஆகிவிட்டது. அப்படியிருக்க இதை அனைவரும் டுவிட்டரில் ட்ரெண்ட் செய்து கொண்டாடி வருகின்றனர்.

ஒளிப்பதிவாளர் பி.சி.ஸ்ரீராம் அவர்களும் இதை தன் டுவிட்டர் பக்கத்தில் ஷேர் செய்துள்ளார்.

இந்நிலையில் இப்படம் ரூ 25 கோடி பட்ஜெட்டில் எடுக்கப்பட்டு, சுமார் ரூ 47 கோடி வரை வசூல் செய்து மாபெரும் வெளிவந்து செம்ம ஹிட் அடித்தது.



தமிழ் மற்றும் தெலுங்கு ஆகிய இரு மொழிகளிலும் முன்னணி நடிகையாக திகழ்ந்து வந்தவர் நடிகை ஸ்ரேயா.

இவர் ரஜினி, விஜய் உள்ளிட்ட பல முன்னணி தமிழ் நட்சத்திரங்களுடன் இணைந்து பணியாற்றியுள்ளார்.

நடிகை ஸ்ரயா 2018ஆம் ஆண்டு Andrei Koscheev என்பவரை திருமணம் செய்து கொண்டார் எனபதை நாம் அறிவோம்.

இந்நிலையில் ஸ்ரேயாவின் கணவர் Andrei Koscheev-க்கு கொரானா தொற்று இருப்பதாக தற்போது தெரிவந்துள்ளது.

மேலும் அவர் விரைவில் குணமடைந்து வரவேண்டும் என்பதே அனைவரின் விருப்பமும்.



ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் முதன் முறையாக ரஜினி நடித்து பொங்கலுக்கு வெளிவந்த படம் தர்பார்.

இப்படம் இந்த வாரம் தமிழ் புத்தாண்டு அன்று தொலைக்காட்சியில் ஒளிபரப்புச் செய்யப்பட்டது.

இந்நிலையில் ஒளிபரப்புச் செய்யப்பட்டதில் வுசீ-யை அடித்து நொறுக்கி நம்பர் 1 இடத்தை பிடித்து சாதனை செய்துள்ளது.



தளபதி விஜய் தமிழ் சினிமா கொண்டாடும் நடிகர். இவர் நடிப்பில் மாஸ்டர் படம் பிரம்மாண்டமாக உருவாகியுள்ளது.

இப்படத்தின் பாடல்கள் அனைத்தும் வெளிவந்து ரசிகர்களை கவர்ந்துள்ளன. இந்நிலையில் கொரோனாவால் மாஸ்டர் படத்தின் ரிலிஸ் தள்ளி சென்றுள்ளது.

விஜய் தன் திரைப்பயணத்தில் கில்லி படத்தின் மூலம் அடுத்தக்கட்டத்தை எட்டினார். இப்படம் ரசிகர்களிடம் அவரை வேறு தளத்திற்கு எடுத்து சென்றது.

அந்த வகையில் கில்லி பாக்ஸ் ஆபிஸில் செம்ம ஹிட் அடித்தது, ரூ 7 கோடி பட்ஜெட்டில் இப்படம் உருவாக்கப்பட்டது.

ஆனால், இப்படத்தின் வசூல் ரூ 41 கோடிகளுக்கு மேல் வந்து செம்ம லாபத்தை எல்லோருக்கும் கொடுத்தது.



தொகுப்பு :- ஹாசினி



# பல்சுவை கதம்பம்

## பெண்களின் அழகை கூட்டும் இயற்கை அழகு குறிப்புகள்....!



முகத்தில் உள்ள முடிகளை அகற்ற, முட்டையின் வெள்ளை கரு, சர்க்கரை, சோளமாவு அனைத்தையும் ஒன்றாகக் கலந்து பசைபோல் ஆனதும் முகத்தில் தடவவும். காய்ந்தவுடன் மெதுவாக பிய்த்து எடுத்தால் முட்டையுடன் முடியும் எளிதில் வரும்.

சருமம் அழகாகவும், பளபளப்பாகவும் மாற கடலை மாவு, மஞ்சள், சந்தனம், அனைத்தையும் கலந்து முகத்தில் தடவி குளித்தால் சருமம் அழகாகவும், பளபளப்பாகவும் மாறும்.

தலை முடி செழித்து வளர வெந்தயத்தை ஊறவைத்து நன்கு அரைத்து தலையில் பேக் போல போட்டு ஊறிய பிறகு தலைக்கு குளிக்க வேண்டும், இவ்வாறு செய்துவந்தால் பலன் தரும்.

சருமம் நிறம் அதிகரிக்க அப்பிள் விழுது இரண்டு டீஸ்பூன், பால்பவுடர் அரை டீஸ்பூன், பார்லி பவுடர் அரை டீஸ்பூன் மூன்றையும் கலந்து முகத்தில் போட்டு அரை மணி நேரம் கழித்து கழுவினால் முகம் மின்னல் போல மின்னும்.

கண்கள் பிரகாசமாக இருக்க இளம் சூடான ஒரு லிட்டர் நீரில், இரண்டு ஸ்பூன் உப்பைப் போட்டு, கண்களை கழுவுதல் வேண்டும். கருவளையம் நீங்க ஒரஞ் பழத்தின் சக்கையை கண்கள் மீது அரை மணி நேரம் வைத்திருந்து குளிர்ந்த நீரில் முகத்தை கழுவினால் கருவளையம் காணாமல் போய்விடும்.

மருதாணி நன்கு சிவக்க மருதாணி போடும் முன் கையில் எலுமிச்சை பழ சாறு தடவி உலர விட்டு பிறகு போட்டால் மருதாணி நன்கு சிவக்கும்.

**நம் நாவில் உச்சரிக்கபடாத வார்த்தைகளுக்குள்ளும் மறைந்து கிடக்கிறது காதல் மௌனமாக!!!**



## வறட்டு இருமலை முற்றிலும் நீக்கும் மஞ்சளின் மருத்துவ பயன்கள்...!!

மஞ்சள் ஒரு மிகச்சிறந்த கிருமி நாசினியாகும். மஞ்சள் கிழங்குகள் கார்ப்பு, கைப்புச் சுவைகளும், வெப்பத் தன்மையும் கொண்டவை. கல்லீரலைப் பலப்படுத்தும் பசியை அதிகமாக்கும் காய்ச்சலைத் தணிக்கும் குடல் வாயுவை அகற்றும் தாதுக்களைப் பலப்படுத்தும் வீக்கம், கட்டி ஆகியவற்றை கரைக்கும்.

மஞ்சளின் கிழங்குகள், பளிச்சிடும் மஞ்சள் நிறமானவை நறுமணமுள்ளவை. உலர்ந்த கிழங்குகளே மருத்துவப் பயன் கொண்டவை. இவை மஞ்சள் என்கிற பெயரில் நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும்.

மஞ்சள், வேப்பிலை ஆகியவற்றைச் சம எடையாக அரைத்து பாதிக்கப்பட்ட இடத்தில் பற்றுப் போட்டு வந்தால் அம்மை கொப்புளங்கள், சேற்றுப் புண் ஆகியவை குணமாகும்.

மஞ்சளை அரைத்து சிரங்குகள், அடிபட்ட புண்கள் அல்லது கட்டிகள்பாதிக்கப்பட்ட இடத்தில் இரவில் பூசவேண்டும். கட்டிகளாக இருந்தால் இரண்டு அல்லது மூன்று நாள்கள் பூசிய பிறகு பழுத்து உடைந்துவிடும். பிறகு சிகிச்சையை தொடர அவை குணமாகும்.

மஞ்சளைச் சுட்டு புகையை நுகர்ந்தால் தலைநீரேற்றம், மூக்கடைப்பு குணமாகும்.

ஒரு துண்டு மஞ்சளைச் சுண்ணாம்பு தெளிவு நீரில் ஊற வைத்து உலர்த்தி இடித்து தூள் செய்து 1 தேக்கரண்டி அளவு தேனில் குழைத்து சாப்பிட வேண்டும். அல்லது ஒரு டம்ளர் பாலில் 1 தேக்கரண்டி அளவு மஞ்சள் தூள் கலந்து காலை மாலை குடித்து வர வறட்டு இருமலுடன் வரும் காய்ச்சல் குணமாகும்.

மஞ்சளை அரைத்து, இரவில் முகத்தில் பூசி காலையில் கழுவி வந்தால் பெண்களுக்கு முகத்தில் வளரும் முடி உதிரும். இது ஒரு பாரம்பரிய முறையாக நமது மருத்துவத்தில் நீண்ட காலமாக இருந்து வந்துள்ளது.

மரமஞ்சள் கட்டைகளை இடித்து, தூளாக்கி 5 கிராம் அளவு தூளை 2 டம்ளர் நீரில் இட்டு ஊற வைத்து 1 டம்ளராக குறையும் வரை காய்ச்சி வடிகட்டி குடித்தால் காய்ச்சல் நாக்குச் சுவையின்மை குணமாகும்.

மரமஞ்சள் கட்டையை சிறு துண்டுகளாக நறுக்கி பாலில் ஊறவைத்து அரைத்து பசையாக்கி பாதிக்கப்பட்ட இடத்தில் பூசி வந்தால் தோல் நோய்கள் குணமாகும்.

மரமஞ்சள் கட்டையை நீர் விட்டு அரைத்து தலை, உடலில் பூசி அரை மணிநேரம் ஊற வைத்து பின்னர் வெதுவெதுப்பான நீரில் குளிக்க உடல் வெப்பம் குறையும்.





## மருத்துவ குணங்கள் நிறைந்த குப்பைமேனி இலை...!!

தோல் நோய்கள் உள்ளவராகில் குப்பைமேனி இலையுடன் சிறுதளவு மஞ்சள் வைத்து அரைத்து, அந்த தோல் நோய்கள் உள்ள இடத்தில் பூச, அனைத்து வகை தோல் நோய்களும் நீங்கிவிடும். முகப்பருக்கள் நீங்கி முகம் பொலிவு பெரும்.

குப்பைமேனிவேர்களைநீரில்கொதிக்கவைத்து அருந்தி வர, வயிற்றுப் பூச்சிகளைக் கொல்லும். இன்னும் பல எண்ணற்ற பலன்கள் அடங்கியுள்ளது.

குப்பைமேனி செடிகளை வேருடன் பிடுங்கி எடுத்துக்கொண்டு, நன்கு அலசி அதனுடன் ஆறு அல்லது ஏழு மிளகுகள் சேர்த்து அரைத்து, இந்தக் கலவையை காலையில் அரைத்த உடனே வெறும் வயிற்றில், ஒரு நெல்லிகாய் அளவு சாப்பிடவேண்டும். இப்படி வாரம் ஒரு முறை என்ற அளவில் மூன்று வாரம் சாப்பிட, உடலில் உள்ள அசுத்த இரத்தம் நீங்கி, உடல் வலுப்பெறும், இரத்தம் சீராகும். இந்தக் கலவை சற்று காரமாக இருந்தால், மிளகுக்குப் பதில் திரிகடுகப் பொடி சிறிது சேர்த்து, உட்கொள்ளலாம்.

குப்பைமேனி இலைச் சாற்றினை 4 துளிகள் அளவு நாக்கில் தடவலாம் அல்லது குப்பைமேனி இலையைக் காய வைத்துத் தூள் செய்து, தேக்கரண்டி அளவு உட்கொண்டுவர கோழை வெளிப்படும்.

குப்பைமேனிச் செடியின் இலையை ஒரு கைப்பிடி அளவு எடுத்து, இலேசாக நசுக்கி, 1 டம்ளர் நீரில் இட்டுக் கொதிக்க வைத்து, கஷாயமாக்கி, வடிகட்டிக் குடிக்க சளி இருமல் கட்டுப்படும்.

குப்பைமேனிஇலைச்சாறு, தேங்காய்எண்ணெய் ஆகியவை சம அளவாக எடுத்துக்கொண்டு, வாணலியில் ஒன்றாக விட்டு, சுண்டக்காய்ச்சி, வடிகட்டி வைத்துக் கொள்ள வேண்டும்.

மூட்டுவலியுள்ள பகுதிகளில் இதனை நன்றாகத் தேய்க்க மூட்டுவலி தீரும். 10 குப்பைமேனி இலைகளை நன்கு கழுவி சுத்தம் செய்து, பசும்பாலுடன் சேர்த்து அவித்து உண்டுவர, தேக அழகும், ஆரோக்கியமும் ஏற்படும்.

தொகுப்பு :- சப்தஹி

# பத்தாண்டுகளை கடந்தும் முள்ளிவாய்க்காலின் ஒரு சோக வரலாறு



தனது கணவர், தான் பெற்ற இரண்டு பிள்ளைகள் ஆகியோரை இறுதி யுத்தத்தில் இழந்து தனியே வசிக்கின்றாள் அந்தத் தமிழ் விதவை. உழைக்கவும், பிழைக்கவும் வழியின்றி அவள் வாழ்வு கண்ணீரினால் கட்டப்பட்டிருக்கின்றது. தனித்திருக்கும் அவளுக்கு தைரியம் ஊட்டுவாரும் இல்லா நிலை. இந்தச் சந்தர்ப்பத்தில் மனிதாபிமானம் கொண்ட தமிழுறவின் கண்கள் அவளைக் காண்கின்றது. அவளின் கண்ணீர்க்கதை அவன் மனதைத் தைக்கிறது. அவளுக்கு உதவி செய்ய அவனிடம் ஏதுமில்லை. ஆனால் உதவுவார் ஓடிவருவர் எனும் நம்பிக்கை இல்லாமல் இல்லை. அவன் கைகள் புலம்பெயர் தமிழுறவுகளிடம் அவளுக்காக நீள்கிறது. புலம்பெயர் கையொன்று அந்தத் தமிழ் விதவையின் கண்ணீரைத் துடைக்கிறது. மாதாந்தம் அவள் வாழ்க்கைக்கான உதவிப்பணம் அனுப்பும் வகை செய்யப்படுகின்றது. யாருமே எனக்கில்லை என நினைத்திருந்த அவளுக்கு யாரோ எனக்காக இருக்கின்றார்கள் எனும் ஆறுதல் தைரியமூட்டுகின்றது. அவளை அறியாத மண்ணை நேசிக்கும் மனம் அவளுக்காகவும் சேர்த்து அங்கே உழைக்கின்றது. அந்த உழைப்பின் ஒரு பகுதி இவளை இன்றுவரை தாங்குகின்றது.

மேலே எழுதியது முற்றிலும் உண்மையான ஒரு பதிவு. 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதியுடன் இலங்கையின் ஆயுதப்போர் முடிவுக்கு வந்தபோதினிலே பல்லாயிரம் பேர்களின் அவல வாழ்க்கையும் தொடக்கத்திற்கு உள்ளானது. தனிநபர் வாழ்க்கை மட்டுமல்ல சமூகம் சார்ந்த புதைவுகளும் தொடங்கின. வாழ வழியின்றி தற்கொலை செய்த சம்பவங்களும் தமிழர் நிலத்தில் நடந்தேறின. உணவுக்கும், உறைவிடத்திற்கும், ஆடைக்கும், அடைக்கலத்திற்குமென தடுமாறின பல்லாயிரம் நெஞ்சங்கள். இந்த வேளையில்தான் கண்ணீர் துடைக்கும் கைக்குட்டைகளாகின புலம்பெயர் புனிதர்களின் கரங்கள். அப்படியானால் தாயகத்திலிருந்து உதவிகள் வழங்கப்படவில்லையா? வழங்கப்பட்டன.

ஆனாலும் பெருவீதமும், அதிகமான தொடர்தலுமே இங்கே நோக்கப்பட வேண்டியது. உதாரணமாக ஒரு மாவட்டத்தில் மாற்றுத்திறனாளி ஒருவர் எவ்வித உதவியும் இன்றி தவிக்கின்றார் என வைத்துக்கொள்வோம். அவருக்கு அத்தியாவசிய உதவி தேவைப்படுகின்றபோது அவர் பற்றிய தகவல் எங்கே அனுப்பப்படுகின்றது? எங்கே இவர்க்கு உதவி கிடைக்கும் என அநேகர் எண்ணம் கொள்கின்றார்களென்றால் அது புலம்பெயர்தேசத்தில்வாழும்புனிதர்களை நோக்கியே ஆகும். இவ்விடத்தில் புலம்பெயர் தேசத்துப் புனிதர்கள் என சொல்லிடக் காரணம், புலம்பெயர் தேசத்தில் வாழும் யாவரும் இப்பணிகளில் ஈடுபடவில்லை என்பதனேலேயாம். அதீத வசதிகள் கொண்ட அநேகர் தானும் தன்பாடு என்றும், இன்னும் அநேகர் இவைகளைக் குறித்து எண்ணிப் பார்க்காததுமான நிலையுமுண்டு. ஆயினும் தாயகத்துத் தமிழர்களை தமது சொந்தமென எண்ணி நித்தமும் உருகும் புலம்பெயர் தமிழர்கள் போருக்குப் பிந்திய மனிதாபிமான செயற்பாடுகளில் இடை விடாது ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்விடத்தில் இன்னுமொரு முக்கிய விடயம் நோக்கத்தக்கது. தாயகத் தமிழர்களுக்கு உதவி வழங்கும் அநேக புலம்பெயர் தமிழர்கள் அந்த நாட்டில் தமக்கான ஒரு சொந்த மனையையோ, தனித்துவ வாகன வசதியையோ கொண்டிராதவர்கள் அநேகர் உளர். தமக்கான தேவைகள் பூரணமாக்கப்படாத நிலையிலும், தமது உழைப்பின் குறிப்பிட்டளவான வீதத்தினை மாதாந்தமோ, குறிப்பிட்ட கால இடைவெளிகளிலோ தாயகத்தின் ஏதோவோர் பணிக்காக வழங்கி வருகின்றார்கள்.

தமிழர் தாயகத்தில் எந்தக் கிராமத்திற்குச் சென்றாலும் அந்தக் கிராமத்தில் ஒருவரோ, பலரோ யாரோ ஒரு புலம்பெயர் தமிழரினால் ஆதரிக்கப்படும் நிலை காணமுடிகின்றது. எந்தப் பாடசாலைக்குச் சென்றாலும் மாணவர்கள் அநேகருக்கு புலம்பெயர் தமிழுறவுகளின் ஆதரவுக்கரம் கிடைக்கும் பதிவு இருக்கின்றது. தவிரவும் எந்தப் பாடசாலையிலும் ஏதோவொரு பொதுவான கற்றல் உதவி புலம்பெயர் தமிழர்களினால் வழங்கப்பட்டிருக்கும்.

மாற்றுத்திறனாளி அமைப்புகள், தொண்டுசார் அமைப்புகள், சமூக மட்ட அமைப்புகள் என அனைத்து அமைப்புகளும் அநேகமாக புலம்பெயர் அமைப்பு ஒன்றிடம் அல்லது தனிநபரிடம் ஆதரவினை பெற்றவையாக அல்லது பெற்றுக்கொண்டிருப்பவையாக இருப்பதை பரவலாக காணமுடிகின்றது.

இருப்பினும் புலம்பெயர் சில அமைப்புகளின் பணிகள் தொடர்பான விமர்சனங்களும் போருக்குப் பிந்திய காலத்தில் எழாமல் இல்லை. அதீத விளம்பரம் தேடுதல், வெளிநாட்டில் சேகரிக்கப்பட்ட நிதிகளை சீராக தாயகத்திற்கு அளிக்காமை என அவை இருக்கின்றன. இருந்தாலும் நாம் இதில் எழுத வந்த முக்கிய விடயம் போருக்குப் பிந்திய கண்ணீர் துடைப்பில் புலம்பெயர் தமிழர்கள் உண்மையான தூய மனிதாபிமானத்துடன் செயற்பட்டதாலும், செயற்பட்டுக்கொண்டிருப்பதனாலும் பல்லாயிரம் பேர்களின் கண்ணீர் துடைக்கப்பட்டிருக்கின்றது என்பதே.

போருக்குப் பிந்திய புலம்பெயர் தமிழுறவுகளின் மனிதாபிமான நடவடிக்கைகள் அநேகம் தனிநபர் அல்லது குடும்பத்தினை சார்ந்து அமைந்திருந்தாலும், சமூகக் கட்டமைப்புக்களினை மையப்படுத்தியும் அநேகம் இடம்பெறுகின்றன. கூட்டுத் தொழில் ஊக்குவிப்பு மையங்கள், பராமரிப்பகங்கள், வாழ்வாதாரச் செயலூக்கங்கள் என அவை உள்ளன. உதாரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் புலம்பெயர் தமிழர் ஒருவரின் தொழிற்சாலையில் 100 வரையான தொழிலாளர்கள் பணி செய்து தமது வாழ்வாதாரத்தினை ஈட்டிக்கொள்வதனைக் காணலாம். இதில் ஒரு தொழிற்தன்மை இருந்தாலும் குறித்த புலம்பெயர் தமிழர் பாதிக்கப்பட்டோரினை உயர்த்துவதை மையமாக்கி அதை ஆரம்பித்து இருப்பதே முக்கியமானது. விவசாயப் பண்ணைகள், தொழிற்பேட்டைகள் என புலம்பெயர் தமிழர்களின் உதவியோடு வடக்கு கிழக்குப் பகுதிகளில் அநேகச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. பிறந்த நாள் விழாக்கள், பிற கொண்டாட்டங்களை தவிர்த்து அதற்குச் செலவழிக்கும் பணத்தினை தாயகத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கும் பாரிய பணிகளும் போருக்குப் பின்னர் அதிகமாக இடம்பெறுகின்றன. தாயகத்திற்கு வருகை தரும் புலம்பெயர் தமிழர்களில் பெரும்பான்மையானோர் ஏதேனுமொரு ஆதரவற்றோர் இல்லத்திற்கோ, அல்லது அத்தியாயவசிய உதவி வேண்டிய இடத்திற்கோ செல்லுவதையும், ஏதேனுமோர் உதவி அளித்துச் செல்வதையும் இந்த நாட்களில் அதிகம் காணலாம். பலரின் உதவிகள் வெளித்தெரிகின்றன. அல்லது ஊக்குவித்தல் கருதியோ, பிற காரணம் கருதியோ வெளியாக்கப்பட்டிருப்பினும், எவருக்குமே தெரியாமல் பெரியளவிலான உதவிகளை வழங்கும் அநேகர் புலம்பெயர் தேசத்தில் உள்ளனர்.

கல்விசார் செயற்பாடுகள் மட்டுமல்லாது, கலை, விளையாட்டு, இலக்கியம் எனவும் புலம்பெயர் தமிழர்கள் தாயகத்து செயற்பாடுகளுக்கான பெரியளவிலான உதவிகளை வழங்கியிருக்கின்றார்கள். இவைகளில் முரண்பட்டு நிலைகளும் தோன்றாமலில்லை. இருந்தபோதும், நமது உறவுகளுக்கு நாம் கொடுக்க வேண்டும் எனும் மனோநிலை இருக்கின்றமையே இங்கே சுட்டிக்காட்டத்தக்கது. இதனைக் கடந்து அரசியல் முன்னெடுப்புகள், உணர்வுசார், எழுச்சிசார் செயற்பாடுகளிலும் ஏதோவோர் வகையில் புலம்பெயர் தேசத்தவர்களின் உதவிகள் கலந்திருக்கின்றன. பிரதானமான தமிழ்க் கட்சிகள், எழுச்சிசார் முன்னெடுப்பாளர்கள், உணர்வுசார் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைப்பவர்கள், புலம்பெயர் சிறு குழுக்கள் அல்லது அமைப்புகள் அல்லது தனிநபர்களிடமிருந்து அநேக நிதிசார் வளங்களை போருக்குப் பின்னர் பெற்றிருக்கின்றார்கள். அனர்த்த நிலைமைகளின்போதும் பல்வேறு வகையான உதவிகள் புலம்பெயர் தேசத்திலிருந்து தாயகத்திற்கு கைகொடுத்திருக்கின்றன.

போர் முடிந்து பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த நாளில் ஏன் இதனை பதிவு செய்தோம்? இந்தப் பத்து ஆண்டுகளில் அரசு சார்ந்த மேம்படுத்தல் முன்னெடுப்புகள் இடம்பெற்றிருப்பினும், அரசினால் செயற்படுத்தமுடியாத அநேக விடயங்களுக்கு புலம்பெயர் தமிழர்களின் உதவியே கைகொடுத்திருக்கின்றது. தவிரவும் தாயக, தமிழகத் தமிழர்களும் அநேக உதவிகளை தொடராக வழங்குகின்றார்கள். ஆனால் பெருவீதமான பங்களிப்பு என்பது புலம்பெயர்ந்து வாழும் மக்களினூடாக தமிழர்களுக்கு கிட்டிச்சேர்ந்திருக்கின்றன. ஆக இந்தப் பத்து ஆண்டுகளில் கண்ணீர் துடைத்து, கரம் கொடுத்து இருளான வாழ்க்கைக்கு வெளிச்சம் கொடுத்த புனிதமான புலம்பெயர் தமிழர்களை இந்த நாளில் பாதிப்புற்று பண்படுத்தப்பட்ட உளங்கள் மறக்கலாகாது. உதவிகளைப் பெறும் அநேகருக்கு தமக்கு உதவி செய்யும் உறவுகளைத் தெரியாது. உதவியளிக்கும் உள்ளங்கள் அநேகருக்கு தமது உதவியைப் பெறுபவரைத் தெரியாது. இருப்பினும் இவர்களிடையே பெயரிடமுடியாத பெரும் பிணைப்புண்டு. அது நம் நிலத்தவர் எனும் நல்மனமே.

முள்ளிவாய்க்காலினால் கிடைத்த கண்ணீரினை புலம்பெயர் கைக்குட்டைகள் துடைத்தமையை இந்தப் பத்தாவது ஆண்டில் நினைத்துக்கொள்வோம்.

**ஹாசினி**

# உலகில் பலம்வாய்ந்த இயக்கமாக 1990–2009 வரை விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர் – ஐ.நா. அறிக்கை

**கடந்தவார தொடர்ச்சி...**

சட்டத்திலான பாதுகாப்பு இருந்த போதிலும் கற்பழிப்பு, பாலியல் துன்புறுத்தல் மற்றும் பாலியலைப் பயன்படுத்தல் ஆகியவற்றை உள்ளிட்ட பாலியல் சார்ந்த வன்முறைகளும் நேர்ந்துள்ளன. வலுக்கட்டாயமான காணாமல்போதல்கள் மற்றும் ஏனைய பாரிய மனித உரிமைகள் மீறல்கள் பற்றிய தொடர்ச்சியான அமைப்பினை ஆராய்வதற்கான பல ஜனாதிபதி ஆணைக்குழுக்கள், சில சந்தர்ப்பங்களில், உண்மையைக் கண்டறியும் முக்கிய தேவையை நிறைவு செய்துள்ளன.

ஆயினும், இவை எதுவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்குவது அல்லது மீறல்களின் முறைசார்ந்த சுபாவம் பற்றி நடவடிக்கை எடுக்க வழிவகுக்கவில்லை. இந்நோக்கில் பார்க்கும் போது, தண்டனையிலிருந்து விலக்கீட்டுரிமைக்கு எதிராகச் செயற்படுவதற்கு, உண்மையை நிலைநாட்டுவதற்கு அல்லது நீதியைப் பெற்றுக் கொள்வதற்கு விசாரணை ஆணைக்குழுக்கள் பயனுறு கருவியாக அமையவில்லை.

38. அரசாங்க நிறுவனங்களைப் பலப்படுத்தி அவற்றின் சுயாதீனத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகள் 2001 இல் 17ஆம் திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு வழிகோலின. ஜனாதிபதியின் அதிகாரங்களை அரசியல் யாப்பினூடாக கட்டுப்படுத்துவதை நோக்காகக் கொண்ட அது பொலிஸ், தேர்தல்கள், மனித உரிமைகள், லஞ்சம், நிதி மற்றும் பகிரங்கச் சேவை ஆகியவற்றுக்கான ஆணைக்குழுக்களின் நியமனங்களை மேற்பார்வை செய்வதற்கான சுயாதீன அரசியல் யாப்புச் சபையை ஏற்படுத்தியது. மேலும், ஏனையவற்றுக்குப் புறம்பாக, உயர் நீதித் துறை, நீதிச் சேவை ஆணைக்குழு மற்றும் சட்ட மா அதிபர் நியமனங்களை இச்சபை அனுமதிக்க வேண்டியிருந்தது. அண்மைக் கால ஜனாதிபதிகள் எவ்விதப் பாரிய விளைவுமின்றி அதனைப் புறக்கணிக்க முடியுமென்பதால் இத்திருத்தம் ஒப்பீட்டளவில் பயனற்றதாகியுள்ளது.

2010 செப்டெம்பரில் பாராளுமன்றம் 18ஆம் திருத்தத்தை நிறைவேற்றியது. அது 17ஆம் திருத்தத்தை பயனற்றதாக்கியதோடு, அதன் சுயாதீனக் கட்டுப்பாடுகளுக்கான நடவடிக்கைகளை அகற்றி ஜனாதிபதியின் பதவிக்கால மட்டுப்படுத்தல்களை இல்லாமலாக்கியது.

39. மூன்று தசாப்தங்கள் நடைபெற்ற யுத்தம் காரணமாக சகல பிரஜைகளின் மனித உரிமைகள் பாதிக்கப்பட்டு, சுயாதீன நிறுவனங்கள் தரமிழந்து சட்டத்தின் நல்லாட்சி நலிவடைந்தது. எல்ரிரிஈ இக்கு எதிரான அதன் இறுதித் தாக்குதலுக்கு அரசாங்கம் தயாராகிய போது, மனித உரிமைகள் மேலும் பாதிப்படைந்ததோடு, பல நடவடிக்கைகள் காரணமாக சுயாதீன செய்தி அறிக்கை விடுத்தல், கருத்து வேறுபாடு மற்றும் மனிதாபிமான நடவடிக்கைகளுக்குக் கூட மேலும் பாரிய கட்டுப்பாடுகள் ஏற்பட்டன. 2006 ஆரம்பத்தில் இருந்து, இராணுவ நடவடிக்கைகள் பற்றி அறிக்கை விடுக்கும் ஊடகவியலாளர்களுக்கு மேலும் கட்டுப்படுத்தும் வழிகாட்டல்களை பாதுகாப்புச் செயலாளர் விடுத்ததோடு, நடவடிக்கைகளை எதிர்மாறாகச் சித்தி ரிப்பது ஒரு குற்றச் செயலாக ஆக்கப்பட்டது. பிரபல்யமான தாக்குதல்கள், காணாமல்போதல்கள் மற்றும் கொலைகளை உள்ளிட்ட ஊடகங்கள் மீதான மேலதிக தாக்கங்கள், அதிக அளவிலான சுய தணிக்கைக்கு வழிவகுத்தது. இனங்காணப்படாத மூலங்களில் இருந்து உள்நாட்டு ஆர்வலர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டதோடு, அதன் விளைவாக சிலர் நாட்டை விட்டுச் சென்றனர். விசா மறுத்தல் அதிகரிப்பு மற்றும் இரத்துச் செய்தல் சர்வதேச பணியாட்டொகுதியினர் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களை அச்சத்துக்குள்ளாக்கியதோடு, சில சந்தர்ப்பங்களில், அவர்கள் தம் நிலைமைகளை விட்டுக் கொடுக்க வேண்டியும் ஏற்பட்டிருக்கலாம்.

(16) யுத்தத்தின் இறுதிக் கட்டங்களை நோக்கி

40. யுத்தத்தின் இறுதிக்கட்டங்களாக மாறுவதற்கான காட்சியை தோற்றுவிப்பதில் குறைந்த பட்சம் மூன்று மேலதிக காரணிகள் முக்கியமானவையாகும்.

41. முதலாவதாக, இலங்கை அரசாங்கமும் எல்ரிரிஈயும் நோர்வையை அனுசரணையாளர்களாக பணியாற்றுமாறு கேட்டுக் கொண்டபோது 2000 ஆம் ஆண்டில் குறுகிய காலப்பகுதியொன் றிலான சமாதானச் செயற்பாடு ஆரம்பித்தது. பெப்ரவரி 2002 இல் தரப்பினர் போர் நிறுத்த உடன்படிக்கையொன்றுக்கு இணங்கியதோடு, நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிக்கு முன்பதாக ஆண் பெண் பாகுபாடு பற்றிய உப குழுவொன்றை நிறுவுவதன் மூலம் எல்ரிரிஈ இன் பக்கத்தில் இருந்து மற்றும் தெற்கில் இருந்து பெண்கள் கலந்துரையாடுவதை உள்ளிட்ட நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டன. டோக்கியோ இணைத் தலைமைகள் ஊடாக (ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், நோர்வே மற்றும் ஐக்கிய அமெரிக்கக் குடியரசு) அரசியல் முன்னேற்றத்தைக் கண்காணித்த மீளிணக்கப்பாடு மற்றும் அபிவிருத்தி பற்றிய டோக்கியோ மாநாட்டின் அடிப்படையில் (2003) சர்வதேச சமூகம் இச்செயற்பாட்டுக்கு



ஆதரவு வழங்கியது. போர் நிறுத்த ஒப்பந்தத்தின் தரப்பினரால் ஏற்படுத்தப்பட்ட சுயாதீன சர்வதேச அமைப்பான இலங்கைக் கண்காணிப்புத் தூதுக்குழு, அரசாங்கம் அதனைக் கலைத்து உத்தியோகபூர்வமாக போர் நிறுத்த ஒப்பந்தத்தை ரத்து செய்த 2008 ஜனவரி வரை கள மீறல்களைக் கண்காணித்து வந்ததது. ஏப்ரல் 2003 இல் எல்.ரி.ரி.ஈ. ஒரு தலைப்பட்சமாக போர் நிறுத்த ஒப்பந்தத்தை ரத்து செய்திருந்தது. அதன் பின்னர் போர் நடவடிக்கைகள் 2006 இல் மீண்டும் ஆரம்பித்ததைத் தொடர்ந்தும் போர் நிறுத்த ஒப்பந்தம் பெரும்பாலும் பெயரளவில் மாத்திரம் இருந்த போதிலும் அது தொடர்ந்தும் உத்தியோகபூர்வ ரீதியில் இருந்ததால் இலங்கை கண்காணிப்புத் தூதுக்குழுவின் நடைமுறையிலான சர்வதேச பிரசன்னத்தை அது உறுதி செய்தது.

42. தொடர்ச்சியான இனவாதப் பிரிவு மற்றும் சகிப்புத் தன்மை இன்மை ஆகியவற்றை முன்னெடுத்துச் சென்ற இரு தரப்பினரிடையேயும் காணப்பட்ட தீவிரப் போக்கு நீண்ட காலமாக இருந்து வந்த மோதலைத் தீர்ப்பதற்கான முன்னைய சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் பட்டியலில் இவ்வாறாக இந்த சமாதானச் செயற்பாட்டையும் விரைவில் சேர்த்து விட்டது. கடுந்தீவிரப் போக்குடைய சிங்களத் தேசியவாதிகள் ஆரம்பத்திலிருந்தே போர்நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதை எதிர்த்தனர்“ மேலும், ஏப்பிரல் 2003 இல் ஒப்பந்தத்தை ரத்து செய்ய எல்.ரி.ரி.ஈ. எடுத்த முடிவும் வடகிழக்கில் இடைக்கால சுயாட்சி அதிகார சபை ஒன்றை அமைப்பதற்கான அதன் ஒரு தலைப்பட்சமான பிரேரணையும் சிங்கள தேசியவாத எதிர்ப்பினை மேலும் உக்கிரமடையச் செய்து, அரசியல் கட்சிகளின் ஆழமான தேசிய கூட்டணியை ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியை திடீரெனத் தோற்றுவித்தது. ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி தற்போதைய ஜனாதிபதியின் தலைமையின் கீழ் 2005 இல் நடைபெற்ற தேர்தல்களில் சுமாரான வெற்றியை ஈட்டியதோடு, இறுதி யுத்தத்தை மேற்கொள்வதற்கான அரசியல் ஆதரவையும் அது வழங்கியது.

43. இரண்டாவதாக, மார்ச் 2004 இல் பொதுவாக கேணல் கருணா என்றழைக்கப்படும் எல்ரிரிஈ இன் கிழக்குத் தளபதி, விநாயகமூர்த்தி முரளீதரன், சுமார் 5,000 போராளிகளைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு எல்.ரி.ரி.ஈ. இல் இருந்து பிரிந்து சென்றார். பின்னர் அவர் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியொன்றான, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (ரிஎம்விபி) அமைப்பினை அமைத்து, அது துணை இராணுவப் பிரிவொன்றைப் பேணும் அதே வேளையில், பதவியில் இருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் உறுப்பினராகச் சேர்ந்தார். இப்பிளவு எல்.ரி.ரி.ஈ. இக்குப் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது. எல்ரிரிஈ இன் தலைமைத்துவத்தில் கருணாவிற்கு இருந்த இடத்தைக் கவனிக்குமிடத்து, மிகவும் இரகசியமான இவ்வமைப்புப் பற்றிய ஆழ்ந்த அறிவு அவருக்கு இருந்ததோடு, இறுதி யுத்தத்திற்குத் தயாராகும் போது அரசாங்கம் அதனைப் பயனுறு விதத்தில் பாவித்துக் கொண்டது. மேலும், எல்.ரி.ரி.ஈ. பற்றி அதிருப்தி கொண்டிருந்த ரி.எம்.வி.பி.யி.ன் துணை இராணுவப் படைகள், அத்துடன் முன்னாள் தமிழ் போராளிக் குழுக்களின் உறுப்பினர்களை எல்ரிரிஈ க்கு எதிரான இராணுவ நடவடிக்கையிலும் தமிழ் பொதுமக்களுக்கு இடையே உளவு பார்க்கும் நடவடிக்கைகளிலும் அரசாங்கம் ஈடுபடுத்தியது.

44. மூன்றாவதாக, சர்வதேச காரணிகளும் முக்கியமானவையாக இருந்தன. பயங்கரவாத அமைப்புக்களுக்கு மற்றும் அவர்களின் சர்வதேச வலைப்பின்னல்களுக்கு எதிராக போர் தொடுத்திருக்கும் நாடுகளுடன், “பயங்கரவாதத்துக்கு எதிரான உலகளாவிய யுத்தம்’ என்ற திட்டத்தின் ஓர் அங்கமாக ஐக்கிய அமெரிக்கக் குடியரசு மற்றும் ஏனைய மேற்கத்திய அரசாங்கங்கள் ஒத்துழைப்பதற்காக எடுத்த முயற்சி எல்.ரி.ரி.ஈ. இக்குப் பாரிய விளைவுகளைக் கொண்டிருந்தது. ஏற்கனவே பல நாடுகளால் பயங்கரவாத அமைப்பு என பட்டியலிடப்பட்ட எல்.ரி.ரி.ஈ. உள்நாட்டு மற்றும் சர்வதேச மட்டத்தில் மேலும் தனிமையாக்கப்பட்டு வந்தது.

தொடரும்...

சுழியோடி




## இணையத்தொழில்நுட்பத்திற்கு அவசியமான சில டிப்ஸ்

உலகின் பல நாடுகளிலும் தற்போது லொக்டவுன் முறை பின்பற்றப்பட்டுவருவதனால் அனேகமான அரசாங்க நிறுவனங்களும், தனியார் நிறுவனங்களும் தமது ஊழியர்களை வீட்டிலிருந்தே பணியாற்றுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளன.

இவ்வாறு பணிபுரிவதற்கு கணினிகள் மற்றும் இணையத்தொழில்நுட்பம் என்பன பெரிதும் உதவியாக இருக்கின்றது.இப்படியிருக்கையில் இந்திய அரசு வீட்டிலிருந்து பணியாற்றுபவர்களுக்காக சில டிப்ஸ்களை வழங்கியுள்ளது.இவை அனைத்து நாட்டிலுள்ளவர்களுக்கும் பயனுள்ளதாக காணப்படுகின்றது.

குறித்த டிப்ஸ்களை இங்கே பார்க்கலாம்.

பயன்படுத்தும் சாதனங்கள் மற்றும் ஒன்லைன் கணக்குகள் என்பவற்றிற்கு ஏற்கனவே பயன்படுத்தி வந்த சாதாரண கடவுச் சொற்களை மாற்றி வலிமையான கடவுச் சொற்களை இடுதல்.

தனிப்பட்ட கணினிகள், லேப்டொப்களை பயன்படுத்துவதை தவிர்த்து நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சாதனங்களைப் பயன்படுத்துதல்.

பணியாற்றுவதற்கு பயன்படுத்தும் சாதனங்களை பொழுதுபோக்கு அம்சங்களிற்கு பயன்படுத்துவதை தவிர்த்தல்.

பணியாளர்களுக்கு இடையில் கலந்துரையாடுவதற்கு (Conference) வழங்கப்பட்ட இணைப்புக்களை சமூக வலைத்தளங்கள் போன்று பொது வெளியில் பகிர்வதை தவிர்த்தல்.

கூட்டுப் பணிகள் மற்றும் வீடியோ கான்பரன்ஸிங் என்பவற்றிற்கு நம்பிக்கையான அப்பிளிக்கேஷன்களை பயன்படுத்தி பணியாற்றுதல்.

பணிச்செயல் முறைமை (OS), ஆன்டி வைரஸ் மற்றும் அப்பிளிக்கேஷன் மென்பொருட்களை தொடர்ந்து இவற்றைப்படுத்துதல் (Update).

தேவையற்ற நேரங்களில் தொலை அணுகல் (Remote Access) வசதியை முடக்கி வைத்திருத்தல்.

அலுவலக கோப்புக்களை கையாள்வதற்கு பாதுகாப்பான இணைய இணைப்பினை பயன்படுத்துதல்.

Phishing முறையிலான தகவல் திருட்டு மின்னஞ்சல்கள் மூலமாக இடம்பெறுவது தொடர்பாக அவதானமாக இருத்தல்.

இலவச மற்றும் திறந்த வை-பை இணைப்புக்களை பயன்படுத்துதலை தவிர்ப்பதுடன் வீட்டில் பயன்படுத்தப்படும் வை-பை இணைப்பில் ஏற்கனவே தரப்பட்டுள்ள கடவுச் சொல்லை மாற்றியமைத்தல்.

இவ்வாறான பாதுகாப்பு டிப்ஸ்களை வீட்டிலிருந்து பணியாற்றுபவர்களுக்கு இந்திய அரசு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## iPhone 8 விற்பனையை நிறுத்தியது ஆப்பிள்

கடந்த 3 வருடங்களுக்கு முன்னர் ஆப்பிள் நிறுவனம் iPhone 8 ஸ்மார்ட் கைப்பேசியினை அறிமுகம் செய்திருந்தமை தெரிந்ததே.

மக்கள் மத்தியில் பலத்த வரவேற்பைப் பெற்றிருந்த இக் கைப்பேசியானது இன்றளவிலும் விற்பனையில் உள்ளது.



எனினும் இந்த மொடல் கைப்பேசி விற்பனையை இந்தியாவில் நிறுத்தியுள்ளது ஆப்பிள்.

இந்தியாவிற்கான ஆப்பிளில் இணையத்தளத்தில் குறித்த கைப்பேசியினை கொள்வனவு செய்வதற்கான "Buy" பொத்தான் நீக்கப்பட்டுள்ளது.

ஆப்பிள் நிறுவனம் இக் கைப்பேசியினை உத்தியோகபூர்வமாக விற்பனை செய்யாவிட்டாலும் வெளிச் சந்தைகளில் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய iPhone SE கைப்பேசியினை விரைவில் ஆப்பிள் நிறுவனம் அறிமுகம் செய்யவுள்ளது.

இதற்காகவே iPhone 8 கைப்பேசி விற்பனையை நிறுத்தியுள்ளதாக நம்பப்படுகின்றது.

## கல்விச் சமூகத்திற்கு பேஸ்புக் வழங்கும் புதிய சேவை

பேஸ்புக் நிறுவனம் கல்விச் சமூகமானது ஒன்லைன் மூலமாக கல்வி கற்பதற்குரிய வளங்களுக்கான வழிகாட்டல்களை தற்போது வழங்கியுள்ளது.

தற்போதைய நிலையில் உலகின் பெரும்பாலான நாடுகளில் மக்கள் லொக்டவுன் நிலையில் வீட்டிற்குள் முடங்கியுள்ளனர்.

இதனால் கல்விச் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன.




எனவே இவர்களுக்கு உதவும் முகமாக ஒன்லைன் மூலமாக பேஸ்புக் உற்பத்திகளை கொண்டு கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான வளங்களை எப்படி உருவாக்குவது என்பதற்கான வழிகாட்டுதலே அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

தற்போது ஆங்கிலம், ஹிந்தி, மராட்டி, குஜராத்தி மற்றும் கன்னட மொழிகளில் இந்த வழிகாட்டி கிடைக்கக்கூடியதாக இருக்கின்றது.

**ஒரு மடத்தனமான வைரஸ் தொற்று, உடலை கொன்றுவிடும். ஆனால், ஒரு புத்திசாலி வைரஸ், அந்த உடலிலேயே வசிக்கத் துவங்கிவிடும்.**

ஜேம்ஸ் இ.லவ்லாக்
ஆங்கிலேய சுற்றுச்சூழல் விஞ்ஞானி



# விளையாட்டு செய்திகள்




## பார்சிலோனா கழகத்தினை மறுசீரமைக்க நடவடிக்கை!

பார்சிலோனா கழகத்தின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு வெளியிட்டு அதன் ஆறு பணிப்பாளர்கள் கடந்த வாரம் பதவி விலகிய நிலையில் பணிப்பாளர்கள் சபையை மறுசீரமைக்கும் நடவடிக்கைகளை அந்தக் கழகம் முன்னெடுத்துள்ளது.

கழகத்தின் நான்கு துணைத் தலைவர்களில் இருவரான எமிலி ரௌசவுண்ட் மற்றும் எம்ரிக் டொபாஸ் ஆகியோரும் பதவி விலகியவர்களில் உள்ளனர்.

இதில் பணிப்பாளர்களான சில்வியோ எலியஸ், ஜோசெப் பொன்ட், ஜோர்டி கல்ஸ்மிக்லியா மற்றும் மரியா டெக்சிடோர் ஆகியோரும் தமது பதவியை இராஜினாமா செய்தனர்.

பதவி விலகிய பணிப்பாளர்கள் கழகத்தின் சமூக ஊடக ஊழல் விவகாரத்தை கையாள்வது தொடர்பில் விமர்சனங்களை வெளியிட்டதோடு கொவிட்-19 தொற்றின் தாக்கத்தை கையாளும் குழுவின் திறன் குறித்த சந்தேங்களை வெளியிட்டுள்ளனர்.

இந்த வைரஸ் தொற்றுக் காரணமாக பார்சிலோனா வீரர்கள் தமது ஊதியத்தை 70 வீதம் குறைக்கவும் இணங்கியமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் பொருளாதாரம் மற்றும் சமபங்கிற்கான துணைத் தலைவராக ஜோர்டி மோயிக்ஸ், நிறுவனத் துணைத் தலைவராக பவு விலனோவா, வர்த்தகப் பகுதியின் உப தலைவராக ஓரியோல் தோமஸ், குழுச் செயலாளராக மார்டா ப்ளானா மற்றும் பொருளாளராக டேவிட் பெல்வர் ஆகியோரை நியமிப்பதற்கு நிறைவேற்றுக் குழு ஒப்புதல் அளித்திருப்பதாக பார்சிலோனா கழகம் அறிவித்துள்ளது.

## கென்ய மரதன் ஓட்ட வீரருக்கு போட்டித்தடை

லண்டன் மரதன் ஓட்டப் போட்டியின் முன்னாள் சம்பியனான கென்ய நாட்டைச் சேர்ந்த டெனியல் வாஞ்சிருவுக்கு ஊக்கமருந்து பயன்படுத்திய சந்தேகத்தில் மெய்வல்லுனர் நேர்மைத்துவப் பிரிவினால் தற்காலிக போட்டித்தடை விதிக்கப்பட்டுள்ளது.

தடைசெய்யப்பட்ட மித்தொட் எனும் ஊக்கமருந்தை பாவித்தமை குறித்த குற்றச்சாட்டு டெனியல் வாஞ்சிருவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளமையினை மெய்வல்லுனர் நேர்மைத்துவப் பிரிவு (Athletics Integrity Unit) உறுதி செய்துள்ளது.

இதன்படி, அவருக்கு எதிரான விசாரணைகள் முடியும் வரை எந்தவொரு போட்டியிலும் பங்குபற்ற முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், அவருக்கான விசாரணைகள் எப்போது நடைபெறும் என குறிப்பிடவில்லை.

இந்த நிலையில், டெனியல் வாஞ்சிரு எந்தவொரு ஊக்கமருந்தையும் உட்கொள்ளவில்லை என அவருடைய முகாமைத்துவ நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த போட்டித்தடை குறித்து கருத்து வெளியிட்டுள்ள டெனியல் வாஞ்சிரு, “எனது உயிரியல் கடவுச்சீட்டு எப்படி கண்டுபிடிப்பட்டது என்பது என்னை குழப்பமடையச் செய்கிறது, வெறுப்பாக இருக்கிறது.

நான் ஏற்கனவே ஊக்கமருந்து பயன்படுத்திய ஒஜ குற்றவாளியாக பார்க்கப்படுவதாக உணர்கிறேன். ஆனால் நான் அவ்வாறு ஊக்கமருந்து



## இலங்கையில் நடாத்தப்படுகின்றதா ஐ.பி.எல் தொடர்?




ஐ.பி.எல் தொடரினை, இலங்கையில் நடத்துவதற்கு தீர்மானித்தால், குறித்த விடயத்துக்கு பூரண ஆதரவை வழங்கவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இந்தியகிரிக்கெட்சபை ஐ.பி.எல்.தொடரைஒத்திவைக்கவுள்ளதாக அறிவித்திருந்தது. ஐ.பி.எல். தொடர் கடந்த மாதம் 29ம் திகதி ஆரம்பிக்கப்படவிருந்தது. எனினும், கொரோனா அச்சம் காரணமாக தொடர் (2020.04.16)அன்றைய தினம் வரை ஒத்திவைக்கப்பட்டது.

இந்தநிலையில், ஐ.பி.எல். தொடரை இலங்கையில் நடத்துவதற்கான தீர்மானம் மேற்கொள்ளும் பட்சத்தில், இந்திய கிரிக்கெட் சபைக்கு முழு ஆதரவையும் வழங்க தயார் என இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் சம்மி சில்வா ஊடகம் ஒன்றின் கேள்விக்கு இவ்வாறு பதில் வழங்கியுள்ளார்.

“ஐ.பி.எல். தொடர் நிறுத்தப்படுமாயின், தொடரின் பங்குதாரர்களுக்கு சுமார் 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை நஷ்டம் ஏற்படும். எனவே, 2009ம் ஆண்டு தென்னாபிரிக்காவில் ஐ.பி.எல். தொடரை நடத்தியது போல், மற்றுமொரு நாட்டில் தொடரை நடத்த முடியும்”

எனவே, நாம் இலங்கையில் நடத்துவதற்கான வாய்ப்பை தர விருப்பம் தெரிவித்துள்ளோம். அதனை இந்திய கிரிக்கெட் சபை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில், இந்திய கிரிக்கெட் சபை கேட்கும் அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க தயாராகவுள்ளோம்.

அதுமாத்திரமின்றி இலங்கையில் உள்ள சுகாதார பிரிவினரின் அனுமதி மற்றும் அவர்களுக்கு கீழ்பட்ட கண்காணிப்புடன் இந்த போட்டித் தொடரை நடத்துவதற்கும் நாம் வசதிகளை மேற்கொள்வோம்.

இந்த தொடரை இலங்கையில் நடத்தும் பட்சத்தில், நாட்டுக்கும், கிரிக்கெட் சபைக்கும் பொருளாதார வளர்ச்சி ஏற்படும்” எனத் தெரிவித்துள்ளார்.

## வயதானாலும் கிரிக்கெட் விளையாடத் தயார் – ஜேம்ஸ் அண்டர்சன்

கொரோனா அச்சுறுத்தல் இருந்தாலும் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெறப் போவதில்லை எனவும், தொடர்ந்து இங்கிலாந்து அணிக்காக விளையாட முடிவு செய்துள்ளேன் என்றும் அந்த அணியின் சிரேஷ்ட வீரரும், வேகப் பந்துவீச்சாளருமான ஜேம்ஸ் அண்டர்சன் கூறியுள்ளார்.

முழு உலகையும் தற்போது அச்சுறுத்திக் கொண்டிருக்கின்ற கொரோனா வைரஸ் காரணமாக பெரும்பாலான கிரிக்கெட் தொடர்கள் இரத்தாகியுள்ளதால் கிரிக்கெட் வீரர்களும் தங்களுடைய வீடுகளுக்குள் முடங்கி விட்டனர்.இதில் குறிப்பாக, இங்கிலாந்து கிரிக்கெட் அணி இம்மாத முற்பகுதியில் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்கு வருகை தந்தது.கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக இங்கிலாந்து அணி வீரர்களை உடனடியாக நாட்டுக்கு திரும்பி அனுப்ப அந்நாட்டு கிரிக்கெட் சபை நடவடிக்கை எடுத்தது.இதனிடையே, கிரிக்கெட்டின் பிறப்பிடமான இங்கிலாந்திலும் கொரோனாவின் அச்சுறுத்தல் நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், அங்கு நடைபெறுகின்ற அனைத்து முதல்தர கிரிக்கெட் தொடர்களையும் மே மாதம் 28ஆம் திகதி வரை ஒத்திவைப்பதற்கு அந்நாட்டு கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது.இங்கிலாந்து அணியின் அனுபவ வீரரும், யோர்க்ஷெயார் அணிக்காக விளையாடி வருகின்ற ஜேம்ஸ் அண்டர்சன், கொரோனா வைரஸ் காரணமாக உள்ளூர் மற்றும் சர்வதேசப் போட்டிகள் இரத்தாகினாலும், தான் ஓய்வு பெறுவது குறித்து இன்னும் தீர்மானிக்கவில்லை என தெரிவித்துள்ளார்.



இதுதொடர்பில் இங்கிலாந்து ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர், இனிவரும் காலங்களில் கிரிக்கெட் விளையாட்டில் இருந்து ஓய்வு பெறுவது குறித்து இன்னும் நான் சிந்திக்கவில்லை.முன்னைய காலங்களைப் போல மீண்டும் கிரிக்கெட் போட்டிகள் வழமைக்கு திரும்பும் என நினைக்கிறேன். இங்கிலாந்து அணிக்காக நீண்டகாலம் விளையாடி வருகிறேன்.இதுதான் எனது தொழில். அதேபோல, எனக்கு இன்னும் இங்கிலாந்து அணிக்காக கிரிக்கெட் விளையாட வேண்டும் என்ற ஆசை உள்ளது.இங்கிலாந்து அணிக்காக அடுத்து விளையாட கிடைக்கின்ற தொடரில் சிறப்பாக செயற்படுவதற்கு எதிர்பார்த்துள்ளேன் என தெரிவித்துள்ளார்.கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக பெரும்பாலான இங்கிலாந்து வீரர்கள் வீடுகளுக்குள் முடங்கிப் போயுள்ளனர்.இந்த நிலையில், ஜேம்ஸ் அண்டர்சன், தனது வேகப்பந்துவீச்சு சகாக்களான ஸ்டுவர்ட் போர்ட், மார்க் வூட் ஆகியோருடன் தொலைபேசி காணொளி வாயிலான நேரடியாக தொடர்புகொண்டு பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

“நான் தொலைபேசி காணொளி வாயிலாக ஒருசில வீரர்களுடன் பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறேன். நேற்றுமுன்தினம் ஸ்டுவர்ட் போர்ட், மார்க் வூட் ஆகியோருடன் இணைந்து பயிற்சிகளை எடுத்தேன். எம்மிடம் Pelotons என்ற உபகரணம் உள்ளது. நாங்கள் அதைப் பயன்படுத்தி பயிற்சிகளை எடுத்தோம்.இந்தப் பயிற்சியில் ஸ்டுவர்ட் போர்ட் வெற்றி பெற்றதுடன், நான் இரண்டாவது இடத்தையும், மார்க் வூட் மூன்றாவது இடத்தையும் பெற்றுக் கொண்டோம்” என தெரிவித்தார்.இங்கிலாந்து அணி, எதிர்வரும் ஜீன் மாதம் மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக குறித்த தொடர் நடைபெறுவதற்கான வாய்ப்பு அரிதாகவே உள்ளது. இதுதொடர்பில் கருத்து வெளியிட்ட அண்டர்சன், எனக்கு கிரிக்கெட் விளையாட வேண்டும். The Hundred போட்டித் தொடர் அல்லது டி20 பிளாஸ்ட் தொடர்களில் எது நடைபெற்றாலும் பரவாயில்லை. இந்த இரண்டு தொடர்களிலும் விளையாடுவதற்கு ஆர்வத்துடன் உள்ளேன்.

# உலக செய்திகள்

## கொரோனா அச்சம் – ரோபோ மூலம் உணவு விநியோகம்




கொரோனா தொற்று அச்சம் காரணமாக தென் அமெரிக்க நாடான கொலம்பியாவில் ரோபோக்கள் மூலம் உணவு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.கொலம்பியாவின் இரண்டாவது பெரிய நகரமான மெடலினில் இவ்வாறு ரோபோக்களின் உதவியுடன் உணவு விநியோகம் செய்யப்படுகின்றது.

உணவகங்களில் முன்பதிவு செய்யப்படும் உணவுகளை செம்மஞ்சல் கொடி கட்டப்பட்ட இந்த ரோபோக்கள் எடுத்துச் செல்கின்றன.இதற்கான பணத்தை ஒன்லைன் ஊடாக கட்டியதும் உணவு விநியோகிக்கப்படுகிறது.ஒவ்வொரு முறையும் உணவு விநியோகம் செய்யப்பட்டதன் பின்னரும் ரோபோக்கள் கிருமி நாசினி மூலம் சுத்தம் செய்யப்படுகின்றன.தினமும் 120 முறை உணவு விநியோகிக்கப்படுவதாக ரோபோக்களின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

## சீனா அதிக விளைவுகளை சந்திக்க நேரிடும் – ட்ரம்ப் எச்சரிக்கை

கொரோனா வைரஸ் சீனாவுக்கு தெரிந்தே பரப்பப்பட்டது என்றால் அந்நாடு அதிக விளைவுகளை சந்திக்க நேரிடும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார். உலகில் உள்ள 200 க்கும் மேற்பட்ட நாடுகள் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டுள்ளதோடு இந்த தாக்கம் காரணமாக பொருளாதார பாதிப்பையும் உயிரிழப்பையும் இந்நாடுகள் சந்தித்து வருகின்றன.

இந்த நிலையில் சீனாவின் வுஹான் பரிசோதனை கூடத்திலிருந்து இந்த வைரஸ் பரவியதாக அமெரிக்கா குற்றம்சாட்டி வருகிறது. இந்நிலையில் வைரஸ் பரவிய காரணம் குறித்து விசாரிக்க தனது நிர்வாகத்தினருக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார்.இதுகுறித்து வெள்ளை மாளிகையில் அன்று (சனிக்கிழமை) செய்தியாளர்களை சந்தித்த அவர், வைரஸ் பரவியதை சீனா ஆரம்ப கட்டத்திலேயே தடுத்திருக்க வேண்டும். ஆனால் அதை செய்யவில்லை. இதனால் ஒட்டுமொத்த உலகமே தற்போது பாதிக்கப்பட்டு வருகிறது.



தற்போது கொரோனா வைரஸ் குறித்து நடத்தப்பட்டு வரும் விசாரணையில் சீனாவுக்கே தெரியாமல் குறித்த வைரஸ் தவறுதலாக பரவியதா என கண்டறியப்படும். அவ்வாறு பரவியிருந்தால் அது தவறு என்றாகிவிடும். ஒரு வேளை சீனாவுக்கு தெரிந்தே வேண்டுமென்றே குறித்த வைரஸ் பரப்பப்பட்டதாக கண்டுபிடிக்கப்பட்டால் அதிக விளைவுகளை சீனா எதிர்கொள்ள நேரிடும். சீனாவையும் மீறி தவறுதலாக அந்த வைரஸ் பரவியமை அல்லது வேண்டுமென்றே பரப்பப்பட்டமை ஆகிய இரண்டுக்கும் பாரிய வித்தியாசம் உள்ளது. அவர்களும் வைரஸ் பரவியது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். நாங்களும் விசாரித்து வருகிறோம். அவர்களது விசாரணை முடிவுகள் என்ன வருகிறது என்பதை பார்ப்போம். சீனாவில் கொரோனா வைரஸ் பரவலால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 0.33 சதவீதமாக உள்ளது என கூறுவதே சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என தெரிவித்துள்ளார்.

## கொரோனாவிலிருந்து மீண்ட 163 பேருக்கு மீண்டும் கொரோனா!

தென் கொரியாவில், கொரோனா பாதிப்பிலிருந்து மீண்ட 163 பேருக்கு மீண்டும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை அதிர்ச்சியினை ஏற்படுத்தியுள்ளது.ஆரம்பத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட தென் கொரியாவில் தற்போது அதன் தீவிரம் படிப்படியாக குறைவடைந்து வருகிறது.



இந்நிலையில் தொற்றிலிருந்து குணமடைந்த 7 ஆயிரத்து 829 பேரில் 2.1 சதவீதம் பேருக்கு மீண்டும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும், 44 சதவீதம் பேருக்கு லேசான அறிகுறிகள் காணப்படுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனால் குழப்பத்தில் ஆழ்ந்துள்ள ஆராய்ச்சியாளர்கள், குணமடைந்தவர்களின் உடலில் எஞ்சியுள்ள வைரசால் மீண்டும் அதன் தாக்கம் தீவிரமடைந்திருக்கக் கூடும் என தெரிவித்துள்ளனர். குணமடைந்தவர்களுக்கு செய்யப்பட்ட பரிசோதனையில் தவறு நிகழ்ந்திருக்க வேண்டும் அல்லது, வைரஸ் மீண்டும் எழுச்சியுற்றிருக்க வேண்டும் என எனவும் கூறப்படுகின்றது.

## மக்களுக்குத் தேவை ரொட்டிகளே தவிர துப்பாக்கிகள் அல்ல- பாப்பரசர் பிரான்ஸிஸ்

பொதுமுடக்கத்தின் 33வது நாளில் அன்று சனிக்கிழமை வெளியிடப்பட்டுள்ள சுகாதார அறிக்கையில், கடந்த 24 மணிநேரத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 642ஆக பதிவாகியுள்ளதோடு, 30,639 பேர் மருத்துமனைகளில் சிகிச்சைபெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 5,833 பேர் தீவிரசிகிச்சை பிரிவில் உள்ளனர்.



கடந்த 24 மணிநேரத்தில் மருத்துமனைகளில் 324 மருத்துமனைகளில் பேரும், மூதாளர் இல்லங்களில் 278 பேரும் உயிரிழந்துள்ளதோடு, 206 பேர் தீவிரசிகிச்சைப் பிரிவுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். 1,563 பேர் குணமடைந்து வெளியேறியுள்ளனர். இதுவரை 173 956 பேர் வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதோடு, இவர்களில் 19,323 பேர் உயிரிழந்துள்ளனர். 35,983 பேர் குணமடைந்து வெளியேறியுள்ளனர்.

தற்போதைய நிலவரம் என்பது தட்டையாக தொடருகின்ற உச்சநிலையாக காணப்படுவதோடு, வைரசின் அச்சுறுத்தல் தொடர்ந்தும் காணப்படுவதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. மருத்துமனைகளிலும் (30,639) தீவிரசிகிச்சைப்பிரிவுகளிலும் (5 833) உள்ளவர்களின் எண்ணிக்கை என்பது பெருமளவில் குறையாது நீடித்து வருவதும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளதெனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

## தாய்வான் கடற்படை வீரர்கள் 700 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்

தாய்வான் கடற்படை வீரர்கள் 700 பேரை தனிமைப்படுத்தியுள்ளதாக அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.கடற்படையில் பணியாற்றிய சிலருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டமையினைத் தொடர்ந்து குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. பசுபிக் பிராந்தியத்தின் பாலவ் தீவு மக்களுக்கான நல்லெண்ண வேலைத் திட்டத்தில் ஈடுபட்ட கடற்படை வீரர்களில் மூவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டமையினைத் தொடர்ந்தே, இவ்வேலைத் திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட கடற்படை வீரர்களில் 700 பேரை தனிமைப்படுத்த தாய்வான் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.




தாய்வானில் இருந்து கடற்படை ஊழியர்களை ஏற்றிக்கொண்டு மூன்று கடற்படைக் கப்பல்கள் குறித்த தீவுக்குப் பயணம் செய்து தாய்வான் மற்றும் பாலவ் ஆகிய நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு உறவினை மேம்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டன.

கடந்த மார்ச் மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த வேலைத் திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டவர்களுக்கே இவ்வாறு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாகவும், மூன்று கப்பல்களிலும் பயணித்த வீரர்கள் மீண்டும் அழைக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தாய்வான் சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தாய்வானின் ஜனாதிபதி ஷாய்-இங்-வென் குறித்த கடற்படைக் கப்பல்களை வரவேற்கும் நிகழ்வில் கலந்துகொண்டிருந்ததாகவும், எனினும் கடற்கரையில் இருந்தவாறே குறித்த வீரர்களை நோக்கிக் கரம் அசைத்து வாழ்த்துத் தெரிவித்துவிட்டு திரும்பியதாகவும் தாய்வான் ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

தாய்வான் படையினர்களுக்குள் பதிவாகியிருக்கும் முதல் கொரோனா வைரஸ் தோற்று இவை என்பதுடன், தொற்றுக்குள்ளான வீரர்கள் மருத்துவக் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும் குறித்த கப்பல்கள் முழுமையாகத் தொற்று நீக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# கொரோனா COVID _ - 19
## இலங்கையின் இன்றைய நிலைமை அறிக்கை

**2020.04.19**

| நோய்த்தொற்று சந்தேகத்தில் | தொற்றுக்கு உள்ளானவர்கள் | குணமடைந்தவர்கள் | மரணமடைந்தவர்கள் |
|---|---|---|---|
| 103 | 260 | 086 | 07 |

| உலகனவில் தொற்றுக்குள்ளானவர்கள் | உலகளவில் மரணமடைந்தவர்கள் | உலகளவில் குணமடைந்தவர்கள் |
|---|---|---|
| 2,330,987 | 596,687 | 160,757 |

**நேற்றைய தினம் பதிவான அதிகூடிய உயிரிழப்பு - அமெரிக்கா - 1,857**

# தேர்தலை ஒத்திவைத்தால் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாமல் போகும் - மஹிந்த சீற்றம்

நல்லாட்சிதேர்தல்களை ஒத்திவைத்ததன் நீட்சியேதற்பொழுதும்நாடாளுமன்றத் தேர்தலை ஒத்திவைக்க மேற்கொள்ளப்படும் முயற்சி. நாடாளுமன்றத்தை மீள கூட்டும்படி விடுவிக்கப்படும் கோரிக்கை, நாடாளுமன்றத்தை தள்ளி வைக்கப்படும் முயற்சி என கொந்தளித்துள்ளார் பிரதமர் மகிந்த ராஜபக்ச.அத்துடன் ஜனாதிபதியால் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் ஜனாதிபதி தேர்தலை நடத்த முடியாவிட்டால் இன்னுமொரு திகதியை நிர்ணயிக்க தேர்தல் ஆணையகம் கடைமைப்பட்டுள்ளது. நாடாளுமன்ற தேர்தலை திகதி நிர்ணயிக்கப்படாமல் ஒத்திவைக்க தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரம் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கையில்,அமெரிக்கா, இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகள் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான பொருளாதார வளர்ச்சி அடைந்துள்ளதால் அவை கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள போதும் வலுவாக உள்ளன. ஆனால் இலங்கை கடுமையான பொருளாதார வீழ்ச்சியை எதிர்கொண்டது. 2015 முதல் 2019 வரை பணவீக்கம் நமது கடன் சுமையை 71% அதிகரித்துள்ளது. ரூபாய் 30% சரிந்தது. பொருளதார வீழ்ச்சி 2.7% ஆக குறைந்தது. 2019 நவம்பரில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் நாம் வெற்றி பெற்று புதிய அரசாங்கத்தை அமைத்தாலும் பாராளுமன்றத்தில் எங்களுக்கு பெரும்பான்மை இல்லையென்ற காரணத்தினால் முந்தைய அரசாங்கத்தின் மருந்துகள் மற்றும் உபகரணங்கள் விநியோகஸ்தர்களுக்கான நிலுவை பணம் செலுத்த முடியவில்லை.

இந்த கட்டத்தில் உள்ள ஒரே சலுகை என்னவென்றால் அரசியலமைப்பின் 15 (3) வது பிரிவின் விதிகள் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை இந்த குறைபாடுகள் அனைத்தையும் மீறி, கொரோனா தொற்றை சமாளிக்க வேண்டியிருந்தது. மார்ச் 11 ஆம் திகதி முதல் கொரோனா வைரஸ்நோயாளி கண்டறியப்பட்டதும் நோயை முன்கூட்டியே கண்டறிதல், நோயாளிகளுக்கு சிகிச்சையளித்தல் பாதிக்கப்படக்கூடிய நபர்களை தனிமைப்படுத்தல், நோயாளிகளின் தொடர்பு மற்றும் சமூக தூரம் போன்ற கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை நாம் அறிமுகப்படுத்தினோம். எங்கள் வாழ்நாளில் இவ் வகையான செயற்பாட்டை நாங்கள் அனுபவித்ததில்லை. நோய் பரவாமல் தடுக்க சில வாரங்களுக்கு ஊரடங்கு உத்தரவையும் விதிக்க வேண்டியிருந்தது.நாடு முழுவதும் வீடுகளை விட்டு வெளியேற முடியாத மக்களுக்கு உணவு மற்றும் மருந்து வழங்கப்பட வேண்டியிருந்தது. குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு உதவி வழங்க வேண்டியிருந்தது.

நாட்டின் உற்பத்தி செயன்முறையை தக்க வைக்க நெல் விவசாயிகள், காய்கறி விவசாயிகள் மற்றும் மீனவர்களின் உற்பத்தியை வாங்க வேண்டியிருந்தது. இந்த எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் ஒழுங்கமைக்க முடிந்தது நிர்வாகத்தின் அதிசயம். கொரோனா வைரஸ் தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதில் இலங்கையின் வெற்றி இன்று உலகம் முழுவதும் அதிகரிக்கப்பட்டுள்ளது.இது தொடர்பாக ஜனாதிபதி தனித்துவமான தலைமையை வழங்கியுள்ளார். நமது அரசு மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் பிற சுகாதார ஊழியர்கள் உலகத்தில் கவனத்தை ஈர்த்துள்ளனர். இன்று கொரோனா வைரஸால் பாதுகாப்பற்ற உலகின் பாதுகாப்பான இடங்களில் நம் நாடு ஒன்றாகும். பேரழிவுகரமான பொருளாதாரம் இருந்தபோதிலும் எங்களால் இதை அடைய முடிந்தது. எல்லா நேரங்களிலும் அரசாங்கத்தின் காலை இழுத்துவிழுத்தும் ஒரு சந்தர்ப்பவாத எதிர்க்கட்சி இருந்த போதும் இதை அடைந்தோம்.தனிமைப்படுத்தலுக்கு செல்ல மறுத்தவர்களை ஊக்குவிப்பதன் மூலம் எதிர்க்கட்சித் தலைவர் கொரோனா வைரஸ் திட்டத்தை ஆரம்பத்தில் இருந்தே நாசப்படுத்த முயன்றார். பாராளுமன்றம் கலைக்கப்பட்ட போது அரசாங்க பணத்தை செலவழிக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை என்று கூறி சுகாதார செலவை உட்பட அனைத்து அரசு சேவைகளையும் நாசப்படுத்த முயன்றனர். புதிய பாராளுமன்றம் ஜீன் 2ஆம் திகதிக்கு முன்பு கூட வேண்டும் என்றும் அதற்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தல் நடத்த முடியாது என்னும் பாராளுமன்றத்தை கலைத்து வெளியிட்டுள்ள வர்த்தமானி ரத்து செய்யப்பட



வேண்டும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். நல்லாட்சி அரசாங்கம் உள்ளூராட்சித் தேர்தலை மூன்று ஆண்டுகளுக்கு ஒத்திவைத்தது எங்களுக்கு நினைவிருக்கிறது. நீதிமன்றங்கள் சென்று தேர்தலை காலவரையின்றி ஒத்திவைக்க அவர்கள் எடுத்த முயற்சி பயனற்றது. ஏனெனில் வழக்குகள் இல்லாமல் உள்ளூராட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல் ஆணையகம் அறிவித்தது. 2017 ஆம் ஆண்டில் மாகாண சபைகள் கலைக்கப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்னர் மாகாண சபை தேர்தல்களை நடத்துவதைத் தடுக்க நல்லாட்சி ஆட்சி மாகாண தேர்தல் முறையை மாற்றியது. திருத்த மசோதாவை நிறைவேற்ற 2/3 பங்கு ஆணை தேவை என்று சட்டமாஅதிபர் அறிவித்த போது அவர்கள் பாராளுமன்ற நடைபாதையில் வாக்களித்து கொள்கையை காட்டிக்கொடுத்து தேவையான பெரும்பான்மையைப் பெற்றனர்.

இந்த அவமானகரமான ஒப்பந்தத்தின் விளைவாக ஓகஸ்ட் 25.2017 அன்று நிறைவேற்றப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டத்தின் விகிதாசார பிரதிநிதித்துவ சதவீதம் 40% ஆகும், அதே நேரத்தில் ஒரு மாதத்திற்குப் பிறகு நிறைவேற்றப்பட்ட மாகாண சபை தேர்தல் சட்டத்தின் விகிதாசார பிரதிநிதித்துவ சதவீதம் 50% ஆகும். உச்ச நீதிமன்றத்தால் தாக்கல் செய்யப்பட்ட நாடாளுமன்றத் தேர்தலை ரத்து செய்து அரசியல் கட்சிகள் உள்ள உலகின் ஒரே ஜனநாயக நாடு இலங்கை மட்டுமே. தற்போதைய நாடாளுமன்றத் தேர்தலை ஒத்திவைக்கும் இந்த முயற்சி அந்த மோசமான கடந்த காலத்தின் விரிவாக்கமாகும்.எப்படியிருந்தாலும் நாட்டின் இயல்பு வாழ்க்கை மீண்டும் தொடங்கப்பட வேண்டும். எங்கள் 25 நிர்வாக மாவட்டங்களில் பதினொன்றில் ஒருவர் கூட கொரோனா வைரஸால் பாதிக்கப்படவில்லை. ஏழு மாவட்டங்களில் ஒன்று அல்லது இரண்டு பேர் பாதிக்கப்பட்டுள்ளனர், இரண்டு மாவட்டங்களில் ஐந்து முதல் ஏழு நோயாளிகள் காணப்பட்டனர், ஐந்து மாவட்டங்களில் மட்டுமே குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான நோயாளிகள் காணப்பட்டனர்.மார்ச் 2 ஆம் திகதி ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைத்து ஏப்ரல் 25 ஆம் திகதி தேர்தலை அறிவித்தார். அதற்கு 10 நாளின் பின்னர் முதலாவது கொரோனா தொற்றாளர் அடையாளம் காணப்பட்டார். எனினும் தேர்தலை ஒத்திவைக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை.1981 ஆம் ஆண்டின் நாடாளுமன்றத் தேர்தல் சட்டம் 24 (3) இன் படி ஜனாதிபதியால் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியாவிட்டால் இன்னொரு திகதியை நிர்ணயிக்க தேர்தல் ஆணையகம் கடைப்பட்டுள்ளது. நாடாளுமன்றத் தேர்தலை திகதி நிர்ணயிக்காமல் ஒத்திவைக்க தேர்தல் ஆணையகத்திற்கு அதிகாரம் இல்லை.எதிர்காலத்தில் வாரங்கள் அல்லது மாதங்களில் சாத்தியமானவை அல்லது சாத்தியமில்லாதவை குறித்து மேற்கொள்ளப்பட்ட அனுமானங்களின்படி கட்டுப்பட வேண்டிய சட்ட விதிகளை புறக்கணிக்க இயலாது என தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 19.04.2020 அன்று வெளியிடப்பட்டது.